விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 03 செவ்வாய்க்கிழமை (19.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 244


SATS-TECH ENGINEERS
NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

## கிளி., முல்லைத்தீவு அரச அதிபர்களை வவுனியாவிலிருந்து பணியாற்ற உத்தரவு

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு அரச அதிபர்களை வவுனியாவிலிருந்து செயலாற்றுமாறு பொது நிர்வாகத்துறை அமைச்சு இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளது.

இதேவேளை வன்னியில் அடுத்துவரும் நாட்களில் மோதல்கள் தீவிரமடையும் என எதிர்பார்க்கின்ற நிலையில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய தன்னார்வ பணியாளர்களை வன்னிக்குச் செல்லவேண்டாம் எனவும் இலங்கை படைத்தரப்பு கேட்டுள்ளது.

அத்துடன் வன்னியில் தாக்குதல்களை தீவிரப்படுத்துவதன் மூலம் சர்வதேச சமூகமும் சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களும் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கடியைக் கொடுத்து அதன் மூலம் அங்குள்ள மக்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவ 26 மில்.ரூபாய் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வன்னியில் முன்னெடுக்கப்படும் படை நடவடிக்கைகள் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களிலிருந்து 30 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இந்த குடும்பங்களுக்கு தேவையான அத்தியாவசிய் சேவைகளை வழங்குவதற்காக அரசாங்கம் 26 மில்லியன் ரூபாயை கடந்த இரண்டு வாரங்களுக்குள் வழங்கியுள்ளது என்று மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் செயலாளர் ஏ.சி.எம்.ராசீக் தெரிவித்தார்.

இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்கின்ற மக்களுக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் கிளிநொச்சி கைப்பற்றப்படுமாம்

## பிரதமர் இரத்தினபுரியில் உரை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கோட்டையான கிளிநொச்சியை அண்மித்துள்ள இராணுவத்தினர் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள இரு மாகாண சபை தேர்தல்களுக்கு முன்பு அதனைக் கைப்பற்றி விடுவார்கள் என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடாவில் மோதல் பத்து இராணுவத்தினர் பலி

### விடுதலைப் புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

முழங்காவில் நாச்சிக்குடா பகுதியில் படையினரின் பாரிய முன் நகர்வு முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 10க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 20க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆட்டிலறி மற்றும் வெடிகணைச் சூட்டாதரவுடன் நாச்சிக்குடா பகுதியூடாகவும் அதனை அண்டிய பகுதிகள் ஊடாகவும் நேற்று முன்தினம் படையினர் பாரிய முன் நகர்வினை மேற்கொண்டனர்.

இம் முன் நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் (12ஆம் பக்கம் பார்க்க)

## பாக். ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் பதவியிலிருந்து நேற்று இராஜினாமா



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

பாகிஸ்தானின் ஆளும் கூட்டணி அரசாங்கம் அதிபர் முஷாரப் மீது குற்றம் சாட்டி பதவியிறக்கம் செய்வதற்கான பிரேரணை ஒன்றை கொண்டு வர இருப்பதாக அந்த நாட்டின் பாதுகாப்புதுறை அமைச்சர் அறிவித்து 24 மணி நேரத்துக்குள் அதிபர் முஷாரப் நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோது இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அதிபருக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களில் அரசியல் அமைப்புக்கு எதிராக செயற்பட்டமை மற்றும் ஒட்டுமொத்த முறைகேடு ஆகியனவும் அடங்குகின்றன.

தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை தனது தொலைக்காட்சி உரையில் மறுத்துப் பேசிய முஷாரப் (12ஆம் பக்கம் பார்க்க)

## 1000 ரூபா நாணயக்குற்றி நேற்று அறிமுகம்



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி ஆயிரம் ரூபா. நாணயக் குற்றியினை அறிமுகம் செய்துள்ளது.

இலங்கைகிரிக்கெட் அணிக்கு உதவி வழங்கும் வகையிலேயே இந் நாணயக் குற்றி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று (12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மேர்வின் சில்வாவை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

ஊடகவியலாளர்களை தாக்கி அவர்களது கமராக்களைப் பறித்த சம்பவத்துடன் தொடர்பு பட்டதாக கூறப்படும் அமைச்சர் மேர்வின் சில்வா, களனிப் பிரதேச சபைத் தலைவர் பிரசன்ன ரணவீர உட்பட நான்கு சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

பேலியகொட தலைமையகப் பொலிஸ் இன்பெக்ஸ்டர் அறிக்கை சமர்ப்பித்த பின்னரே கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுளா திலகரட்ன இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த நான்கு சந்தேக நபர்களும் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்ததாக நீதிவானின் குறுக்கு விசாரணையின்போது தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதிலளித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பிரதேசத்துக்கான தபால் பொதிகள் அனுப்பி வைப்பு

(வவுனியா)

வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் கடந்த ஒருவார காலமாக தேங்கிக் கிடந்த வன்னிப் பிரதேசத்திற்கான தபால் பொதிகள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டதாக அஞ்சல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கு தபால் பொதிகளை எடுத்துச் செல்லும் ஊழியர்கள் கடந்த வாரம் அங்கு இடம்பெற்ற எறிகணை தாக்குதல்கள், விமானதாக்குதல்கள் காரணமாக அச்சமடைந்திருந்ததையடுத்து கடந்த ஒருவார காலமாக வன்னிப்பகுதிக்கான அஞ்சல் சேவை பாதிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், தபால் பொதிகளை ஏற்றிச் செல்லும் வாகனமும் பழுதடைந்திருந்தது. திருத்த வேலைகள் செய்யப்பட வேண்டியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஓமந்தைக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

# வட.- கிழக்கு இணைப்பை இல்லாமல் செய்த இந்திய அரசுடன் எதைப் பற்றிப் பேசுவது?

## 'நிலவரம்' ஏடு கேள்வி

(ஜெனீவா)

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடக்குக் கிழக்கு இணைப்பை இலங்கை இல்லாமல் செய்தபோது அது பற்றிக் கவலைப்படாமல் இந்தியா உள்ள நிலையில் இந்தியாவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசுவதற்கு என்னதான் இருக்கிறது? என்று சுவிஸிலிருந்து மாதம் இருமுறை வெளிவரும் நிலவரம் ஏடு கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் அந்த ஏட்டில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈழத் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு எதுவும் கிடைத்துவிடக் கூடாது என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் செயற்பட்டு வரும் இந்தியா மீண்டும் ஒருமுறை ஈழப் பிரச்சினையில் மூக்கை நுழைக்க ஆரம்பித்துள்ளமையை அண்மைக்கால நடவடிக்கைகள் புலப்படுத்தி வருகின்றன.

போர்க் களத்தில் தமிழர் தரப்பின் கை ஓங்கிவிடக் கூடாது என்பதற்காக இலங்கைக்கு மறைமுகமாக ஆயுத, பொருளாதார, நிபுணத்துவ உதவிகளை இடையறாது இந்தியா வழங்கி வருகின்றமை ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

இந் நிலையில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளே என்பதை ஏற்றுக் கொள்ள சிங்கள தேசம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் ஏற்றிருந்தாலும் கூட தொடர்ச்சியாக மறுத்து வரும் இந்தியா தற்போது விடுதலைப்புலிகளை அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதன் ஒரு அங்கமாக இலங்கை அரசின் அரசியல் நலன்களுக்காக அண்மையில் கிழக்கில் நடாத்தப்பட்ட தேர்தலில் வெற்றி வெற்ற பிள்ளையானின் கரங்களைப் பலப்படுத்தும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளது.

இதே சமயம் அண்மையில் நடைபெற்ற தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் 15-வது மாநாட்டுக்காக கொழும்பு சென்றபோது தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளையும் ஒட்டுக் குழுக்களையும் சந்தித்த் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பிள்ளையானின் கரங்களைப் பலப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்ததாகத் தெரிகின்றது.

அத்துடன் கிழக்கு மாகாண சபைக்குப் பொலிஸ் அதிகாரம் அடங்கலான அதிகாரங்களை வழங்குமாறு இலங்கை அரசை வலியுறுத்திய இந்தியப் பிரதமர், வட மாகாணத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மிதவாத சக்திகளைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கட்டளையிட்டுள்ளார்.

இந்தியாவின் இத்தகைய நடவடிக்கைகள் ஈழத் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை அப்பட்டமாக மறுதலிப்பதாகவும் விடுதலைப்புலிகளின் கடந்த கால செயற்பாடுகளுக்கு வஞ்சம் தீர்ப்பதாகவும் அமைந்துள்ளது.

தற்போது தமீழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்தியா பேச்சுகளுக்கு அழைத்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. அத்தகையதொரு பேச்சுவார்த்தை இடம்பெறுமானால் எதைப் பற்றிப் பேசுவது?

தமது கோரிக்கைகள் என்ன என்பதைத் தமிழ் மக்கள் 1977 பொதுத் தேர்தலில் தெளிவாகக் கூறியுள்ளார்கள். இது தவிர, 1985 இல் திம்புவில் நடைபெற்ற பேச்சுக்களின் போது தமிழர் தரப்பு 4 அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைத்தது.

இந்தக் கோரிக்கைகளை இந்தியா இன்று வரை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். எனவே அத்தகைய பேச்சுகளுக்கு முன் இந்தியா இது தொடர்பாகத் தனது நிலைப்பாட்டைப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

இவை ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடக்குக் கிழக்கு இணைப்பை இலங்கை இல்லாமல் செய்தபோது அதைப்பற்றிக்கவலைப் படாமல் இந்தியாவுள்ள நிலையில் இந்தியாவுடன் பேசுவதற்கு என்னதான் இருக்கின்றது? என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-5)

## மன்னாரில் இருவரைக் காணவில்லை

(மன்னார்)

மன்னார் பேசாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரையும் மன்னார் தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரையும் காணவில்லை என மன்னார் சகவாழ்வு மன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் பேசாலையைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான அமீனானந்தம் ஆனந்தராஜ் (வயது-40) எனும் குடும்பஸ்தர் கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணி முதல் காணாமல் போயிருப்பதாக அவரது மனைவி மன்னார் சகவாழ்வு மன்றத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை மன்னார் தம்பனைக்குளத்தைச் சேர்ந்த முருகேசு சுரேஸ் (வயது-18) எனும் இளைஞன் கடந்த 15 ஆம் திகதி விறகு வெட்டச் சென்றபோது காணாமல் போயிருப்பதாக அவரது தாயார் நேற்று மன்னார் சக வாழ்வு மன்றத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ச)

## தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு கண்காணிப்பாளர்கள் கவலை

(கொழும்பு)

வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலின் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துச் செல்வதாகத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையமான கஃபே அமைப்புக்கு 202 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.தமது அமைப்புக்கு 146 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேசிய தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

அவிசாவளை தல்துவப் பிரதேசத்தில் உணவகம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல் இடம் பெற்றுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் சிலருக்கும் மற்றும் சிலருக்குமிடையில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோதலில் காயமடைந்த இருவர் அவிசாவளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த மோதல் சம்பவத்தில் தொடர்புடைய 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கடமையை சரிவர நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த இரத்தினபுரி வேவல்வத்த பொலிஸ் நிலைய அதிகாரி உட்பட 5 பேர் சேவைக்கு மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சப்ரகமுவ மாகாண முதன்மை வேட்பாளர் ரஞ்சன் ராமநாயக்க உள்ளிட்ட சிலர் பயணித்த வாகனத் தொடர் அணி மீது தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றாமை தொடர்பாலேயே 6 பொலிஸ் அதிகாரிகள் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

இந்தப் பொலிஸ் அதிகாரிகளில் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரின் சேவை மாத்திரம் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர குறிப்பிட்டார். (ச-3)

## வவுனியாவில் இளைஞர் காணாமல் போயுள்ளார்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளத்தில் வசித்து வந்த ஒருவரை கடந்த வியாழக்கிழமை முதல் காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது. அவருடைய தாயார் இந்த முறைப்பாட்டைச் செட்டிகுளம் பொலிஸ் நில்லையத்தில் செய்துள்ளார்.

தில்லையம்பலம் தில்லைராஜா என்பவர் வீட்டுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகக் கூட்டுறவுச் சங்கக் கடைக்குச் சென்ற பின்னர் வீடு திரும்பவில்லை எனத் தாயார் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ரயிலிலிருந்து வயர்கள் மீட்பு

(வவுனியா)

கொழும்பிலிருந்து அநுராதபுரம் சென்ற தபால் ரயிலிலிருந்து குண்டை வெடிக்க வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் வயர்களைப் பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர்.

அநுராதபுரத்தில் நிறுத்தப்பட்ட ரயிலை சோதனைக்குட்படுத்திய பொலிஸார் அதனுள் இருந்த மலசலகூடம் ஒன்றிலிருந்து இந்த வயர்களை மீட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-5)

## சீனாவிலிருந்து யாழிற்கு எடுத்து வரப்பட்ட மின்பிறப்பாக்கிகளை இயக்க முடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

சீனாவிலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்ட மின்பிறப்பாக்கிகளில் இரண்டு இயங்க முடியாத நிலையில் பழுதடைந்து காணப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.குடாநாட்டில் மின் விநியோகத்தைச் சீரான முறையில் வழங்கும் நோக்குடன் சீன நிறுவனம் ஒன்று சுன்னாகத்தில் மின் நிலையம் ஒன்றினை அமைத்துள்ளது.

அதற்கான மின் பிறப்பாக்கிகள் கடந்த ஜூன் மாதம் எடுத்து வரப்பட்டுள்ளன. அவற்றில் இரு மின்பிறப்பாக்கிகள் இயங்க முடியாத நிலையில் காணப்படுவதால் மின்சாரத்தை வழங்கும் வேலைகளை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்ட மின்பிறப்பாக்கிகள் கொங்கொங்கில் பயன்படுத்தப்பட்டுத் திருத்த வேலைகளுக்காகச் சீனாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும் அவற்றின் திருத்த வேலைகள் நிறைவு பெற்றதும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் யாழ்.குடாநாட்டிற்கு முழுமையாக மின்சாரம் வழங்கப்படும் என்ற உறுதிமொழி கேள்விக் குறியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மின் பிறப்பாக்கிகளை இடமாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் கிரைன் பழுதடைந்துள்ளதாலேயே சீன நிறுவனத்தின் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (எ)



சொண்ட் அரச சார்பற்ற நிறுவனத்தில் உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நேற்று முன்தினம் நடைபெற்ற திட்ட முன்மொழிவு தயாரித்தல் பயிற்சி நெறியில் முன்னாள் மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் ஆரம்ப உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## கலை விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையால் உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நடாத்தப்படும் கலை விழா- 2008 நிகழ்வு சங்கானை நிரஞ்சனாஸ் திரையரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்து கொள்கின்றார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், வலி.மேற்குப் பிரதேச செயலாளர் ரூபினி வரதலிங்கம் மற்றும் யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் ஆகியோரும்,

கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் மற்றும் வட்டுக்கோட்டைத் தொழில் நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் என்.ஆர்.ஜி.கூல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## இன்று ஒரு தகவல்

### பணமும் பையனும்

அப்பா... ஒரு ஐநூறு ரூபாய் இருந்தால் கொடுங்க... என் "பிரண்ட்ஸ்" "உடன் சேர்ந்து பிக்னிக் போக வேண்டும் என்றான் பையன். "அதெல்லாம் இப்ப எதற்கு?" என்றார் அப்பா. உடனே பையனுக்குக் கோபம் வந்து விட்டது.

"மாதம்ஐயாயிரம் சம்பாதிக்கிறீங்க! நான் உங்களுக்கு ஒரே பையன் ! ஒரு 500ரூபாய் கொடுக்கிறதுக்கு இவ்வளவுகணக்குப் பார்க்கிறீங்களே!" என்றுசொல்லி விட்டு வேகமாக வெளியில் போய்விட்டான்.

இது வீட்டில் நடக்கும் ஒரு விஷயம். இதற்கு என்ன காரணம்? பணத்தின் மதிப்பு பையனுக்குத் தெரியவில்லை என்று அர்த்தம்.

பிள்ளைகளுக்குபழக்கவழக்கத்தை சொல்லிக் கொடுப்பதோடு பணத்தைக் கையாளுவது எப்படி என்பதையும் சிறிய வயதிலேயே சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆனால் நாம் அப்படி செய்வதில்லை அதனால் தான் பெரியவர்களாகியதும் கெட்டுப் போய் வரவு –செலவு என்றால் என்னவென்று தெரியாமலே வளர்ந்து விடுவார்கள் அதனால் பிற்காலத்தில் சிரமப்பட வேண்டி யிருக்கும்.

பிள்ளைகளுக்கு பழக்கவழக்கத்தோடு பணவிடயத்தையும் எப்படிக்கற்றுக்கொடுப்பது என்பதற்கு நிபுணர்கள் சிலர் வழிமுறைகளை சொல்லியிருக் கிறார்கள். பிள்ளைகளுக்கு நீங்கள் நினைக்கும் போதெல்லாம் பணம் கொடுப்பதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து விடுங்கள்.

சிறியவர்களாகஇருந்தால் ஒரு பத்து ரூபாய் அல்லது 20 ரூபாய்...நிலைமைக்குத் தகுந்த மாதிரி கொடுங்கள். அதை அவர்களே வைத்து செலவு செய் யட்டும் சில சமயம்அதைத் தொலைத்தாலும் கண்டு கொள்ளாதீர்கள். அவர்களே அவஸ்தைப்படட்டும். அவசிய செலவு எது, அனாவசிய செலவு எது, பணம் தொலைந்தால் எவ்வளவு அவஸ்தை என்பதையெல் லாம் அவர்களே புரிந்து கொள்ளட்டும்.

மிகவும்சிறியவனாக இருந்தால் வாரத்துக்கு ஒரு தடவை ஒரு ரூபாய் அல்லது 2 ரூபாய் கொடுத்து செலவு பண்ணச் சொல்லுங்கள். ஒரு மாதத்துக்கு என்று சேர்த்துக் கொடுத்தால் கஷ்டமாகஇருக்கும். வேலை செய்து சம்பாதிக்க வேண்டும் என்று அவர் கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பெரியவனாக இருந்தால் படிப்பு நேரம் போக part time வேலை செய்யஏதாவது சந்தர்ப்பம் இருந்தால் தாராளமாக செய்யட்டும் அதைத் தடுக்க வேண்டாம். சேமிக்கும் பழக்கத்தை ஆரம்பத்திலிருந்தே கற்றுக் கொடுக்க வேண்டும். சிறியவர்களுக்கு அந்த நேரத்து சந்தோஷம் தான் முக்கியமாகத் தெரியும் .

புத்தி சாலித்தனமாக செலவு செய்வது எப்படி என்று அவர்களுக்கு காட்டுங்கள். அதிக விலை கொடுத்து ஒரு பொருளைவாங்குவதை விட குறைந்த விலையில் இரண்டு தரமான பொருட்கள் வாங்கலாம்என்பதை புரிய வையுங்கள்.

குடும்பச் செலவை இளைஞர்களும் உணரும் படி செய்ய வேண்டும். எல்லாவற்றையும் விட உங்கள் குழந்தைக்கு நீங்களே உதாரணமாக இருக்க வேண்டும். பிள்ளைகளிடம் பாசமாகஇருக்க வேண்டியது தான்... அதற்காக பணம் கொடுத்துத் தான் அதைக் காட்டிக் கொள்ள வேண்டும் என்றில்லை ஆசையாக ஒரு வார்த்தை பேசினாலே போதும்.

அப்பாவும் பையனும் ஒருஇடத்திற்கு பஸ்ஸில்புறப்பட்டனர். பஸ்ஸில் கூட்டம் அதிகம் புறப்படுவதற்கு முன் தன் பையனிடம் 10 ரூபாயைக் கொடுத்து கவனமாக வைத்திருக்கச் சொன்னார் அப்பா.

பஸ்ஸை விட்டு இறங்கியதும் பணத்தைக் கேட்டார் அவன் பொக்கற்றில் தடவிப் பார்த்தான் பணம் இல்லை முழிக்க ஆரம்பித்தான். " இதோ பாரப்பா ... எப்பவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்அதைஉனக்கு கற்றுக் கொடுக்கத்தான் உன்னை அழைத்துக் கொண்டு வந்தேன் உன்னிடம் இருந்த பணம் எங்கும் போக வில்லை இதோ என்னிடம் தான் இருக்கிறது " என்று சொல்லிக் கொண்டே தன் பொக்கற்றில் கையைவிட்டார். பொக்கற்றையே காணவில்லை...அதை எவனோ ஒருவன் வெட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டான். இப்ப அப்பா பையனை பார்த்து முழிக்க ஆரம்பித்தார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## தமிழர் நலன் காக்க தமிழகத்தில் அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும்

### பழ.நெடுமாறன் தெரிவிப்பு

(மதுரை)

இந்தியாவில்–அடைக்கலம் புகுந்துள்ள இலங்கை தமிழர்நலனை



மத்திய அரசு புறக் கணிக்கிறது. தமிழர் நலன் காக்க தமிழகத்தில் அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்தார் மதுரையில் கடந்த சனிக்கிழமை உலகத்தமிழர் பேரமைப்பின் 6ஆவது நிறைவு விழாவும் உலகத் தமிழ் எழுத்தாளர் சிறப்பு மாநாடும் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் வேறுபாடு உண்டு. இலங்கைத் தமிழர்கள் தங்களது மொழி கலாசாரத்தைப் பாதுகாக்கின்றனர் தமிழகத்தில்இருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள்பற்றி தாய்த் தமிழகம் கவலைப்படுவதில்லை அதனால் தமிழகத்திலிருந்து புலம் பெயர்ந்துள்ளவர்கள் தமிழைஇழந்து கொண்டு இருக்கின்றனர் இதனால் இன அடையாளத்தை இழக்கும் அபாய மும் உள்ளது. இந்தப் போக்குக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும்.

இந்தியாவில் அடைக்கலம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர் நலனை மத்திய அரசுபுறக்கணிக்கிறது. கச்சதீவைஇலங்கைக்குத் தாரை வார்த்ததால் நமது மீனவர்துயரம் அடைந்துள்ளனர். இது வரை 400 பேர் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். ஆனால் இந்திய அரசானது ஒரு வருக்குக் கூட நஷ்ட ஈடுவாங்கித் தரவில்லை.

இலங்கையில் ஈழத் தமிழர்கள் வாழ்வா,சாவா எனபோராடும் நிலையில் அந்நாட்டுக்குமத்திய அரசு ஆயுதம் வழங்குகிறது. தமிழர்களுக்கு மத்திய அரசு வஞ்சனை செய்கிறது.

காவிரிப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத கர்நாடக அரசை தட்டிக் கேட்பதற்கு நாதி இல்லை. தமிழக அரசுக்கும் துணிவில்லை. எந்த அரசையும் அரசியல் கட்சியையும் நம்பி தமிழர்கள் நலனை நிலைநாட்ட முடியாது. நாமே போராடிநிலை நாட்டவேண்டும். உணர்வின் அடிப்படையில் மக்களை ஒன்றுபடுத்தமுடியும்.

தமிழகத்தில் மகத்தான அரசியல்மாற்றம் கொண்டுவர வேண்டும். இதற்கு மக்களை ஒன்றுதிரட்ட வேண்டும் அரசியல்மாற்றம் மூலமே நம்மையும் உலக நாடுகளில் உள்ள நமது தமிழர்களையும் பாதுகாக்கமுடியும்என்றார். (ஓ–6)

## பெரும்பான்மையை தக்க வைப்பதற்காகவே முஸ்லிம் எம்.பிக்களுக்கு அமைச்சு பதவிகள்

### அமைச்சர் அதாவுல்லா கூறுகிறார்

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கம் அமைச்சுப் பதவிகளை வழங்கியது. முஸ்லிம்களுடன் கொண்ட பாச உணர்வாலல்ல. மாறாக பாராளுமன் றத்தில் பெரும்பான்மையைத் தக்க வைத்துக்கொள்வதற்காக வேயாகும் என்று நீர்வழங்கல் வடிகாலமைப் புத்துறை அமைச்சரும் தேசிய காங்கிரஸ் தலைவருமான ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்தார்.

வடமத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தேசிய காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து நேகமவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில். அநுராதபுர மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமங்கள் பல அடிப்படை வசதிகளற்று பின் தங்கிய நிலையிலிருப்பது இங்கு வந்து பார்த்தபோதுதான் தெரிய வந்துள்ளது.

அநுராதபுர மாவட்ட முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டு ஒருமித்து வாக்களிப்பதாயின் ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரை கூட தெரிவு செய்து கொள்ளலாம். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டால் ஒவ்வொரு வருடமும் ஐம்பது இலட்சம் ரூபாவின் சேவை முஸ்லிம் கிராமங்களுக்குச் செய்யக் கூடியதாகவிருக்கும். ஐக்கிய தேசியக் கட்சியிலோ அ ல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலோ முஸ்லிம்கள் போட்டியிடுவதால் அநுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் வெற்றி பெறமுடியாது.

அன்று தலைவர் அஷ்ரப் முஸ்லிம்களின் நலனுக்காகவே ஆரம்பித்த முஸ்லிம் காங்கிரஸ் அதன் தற்போதைய தலைவரின் நடவடிக்கைகள் காரணமாக சின்னாபின்னமாகியுள்ளது. அனைத்து தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி சின்னத்தின் கீழ் போட்டியிட்டு வருகின்றது.

இதனால் முஸ்லிம்களின் கட்சி ஒன்று என்ற நிலையிலிருந்து அது விலகியே செல்கின்றது. கடந்த பல வருடகாலமாக மாகாண சபையில் உறுப்பினராகவிருந்த ராவுத்தர் நெய்னா முஹம்மட்டினால் எந்த நன்மையையும் இம்மாவட்ட மக்கள் பெற்றுக் கொள்ளவில்லை என்பதே என் கணிப்பாகும்.

நான் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்படவோ எனது தனிப்பட்ட நலன்களுக்கோ இம்மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவில்லை.

அநுராதபுரம், பொல நறுவை மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களுக்கு குரல் கொடுக்கக் கூடிய ஒரு சக்தியை உருவாக்கும் நோக்கத்திலேயே எமது கட்சி சார்பான வேட்பாளர் குழு வொன்றை போட்டியிட வைத்து பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றேன்.

வட மத்திய மாகாண சபைத் தேர்தல் கள நிலவரத்தின்படி சிறு கட்சி யொன்றின் ஆதரவுடனேயே பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கக் கூடியதாக விருக்கும்.

எமது கட்சி சார்பாக போட்டி யிடும் உறுப்பினர்களில் குறைந்தது இருவரை வெற்றி பெறச் செய்தால் மாகாண சபையில் பேரம் பேசி ஒரு மாகாண அமைச்சைப் பெற்றுக் கொண்டு அதன் மூலம் சிறந்த சேவையொன்றைச் செய்ய முடியும்.

இவ்வாறு மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படு மிடத்து அவர்களின் மூலமாக மாவட்ட முஸ்லிம்களின் குறைகளை பாராளு மன்றத்திலும் கதைத்து தீர்வு களைப் பெற்றுக் கொடுக்க வசதியாக அமையும் என்றார். (ஓ–6)

## இராசி பலன்

19.08.2008
(ஆவணி 03 செவ்வாய்கிழமை)
பூரட்டாதி பிற்பகல் 4.06 மணிவரை
திருதியை பின்னிரவு 1.54 மணிவரை
இராகுகாலம்–3.05–04.35மணிவரை
சுபநேரம்–10.35–12.05 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், கோபப் படுதல், சுபசெலவு, சயனசுகக் குறைவு. |
| இடபம் | செய்தொழில் விருத்தி, குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், பெருமையடைதல். |
| மிதுனம் | சுபநிகழ்வு, கடிணஉழைப்பு, புதிய தகவல், முயற்சி கைகூடும். |
| கடகம் | உடல் உழைப்பு, ஆன்றோரால் மதிக்கப்படுதல், புதிய முயற்சி, திடீர் பயணம். |
| சிங்கம் | ஆரோக்கியக்குறைவு, வீண் தொல்லை, காரிய தடங்கல், போசனசுகம். |
| கன்னி | அபூர்வசந்திப்பு, செல்வாக்கு, காரியசித்தி, பொருள் சேர்க்கை. |
| துலாம் | பணவருவாய், சுவாரஸ்யம், முயற்சிகைகூடும், பயணம். |
| விருச்சிகம் | வியாபாரவிருத்தி, மரியாதைக் குறைவு, முயற்சி தாமதம். |
| தனுசு | கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், ரோகநிலை, முயற்சி தாமதம். |
| மகரம் | கூட்டுமுயற்சி, சகோதரர்கள் வழிநன்மை, விருந்துபசாரம், அந்நியர் சந்திப்பு. |
| கும்பம் | வேலைச்சுமை, முயற்சி தாமதம், உடல்நலக்குறைவு, பண விரயம். |
| மீனம் | தெய்வசிந்தை, புதிய முயற்சி, உறவினர் சந்திப்பு. |

வளவன்

## இ.தொ.க.ஆதரவாளர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் பயணித்த பஸ்களின் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கல்வீச்சினால் எட்டு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யட்டியாந்தோட்டை வின்ஸ் டன் பெரேரா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு தங்களது சொந்த இடங்களுக்கு பஸ்களில் திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த கல்வீச்சு நேற்று முன்தினம் இரவு 7.30 மணியள வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இ.தொ. கா.வின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக யட்டியாந் தோட்டை, புளத்சிங்கள, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களிலிருந்து பஸ்களை வாடகைக்கு அமர்த்தி வருகைதந்திருந்த ஆதரவாளர்கள் கூட்டம் நிறைவுபெற்று தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பிக் கொண்டிருந்த போதே அந்த பஸ்களை இலக்குவைத்து கல்வீச்சு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் சுமார் நான்கிற்கு மேற்பட்ட பஸ்களின் கண்ணாடிகள் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ள தாகவும் தெரிவிக்கப் படுகின்றது. இந்த கல்வீச்சு சம்பவம் தொடர்பில் அவிசாவளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ–6)

## தாச்சிச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கியின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 13ஆவது தாச்சிச் சுற்றுப் போட்டியில் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நவாலி சென்றொக் விளையாட்டுக்கழகம் எதிர் மயிலிட்டி இளைஞர் ஒன்றியம் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழகம் எதிர் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. ஓ

## இசை அர்ச்சனை ஒத்திகை நிகழ்வு

நல்லூர்க் கந்தன் கார்த்திகை திருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை ஆலய உள் வீதியில் பகல் 11 மணிக்கு இசையர்ச்சனை நிகழ்ச்சி இடம் பெறவுள்ளது.

யாழ். குடாநாட்டிலுள்ள இசைக் கலைஞர்கள் பங்குபற்றும் இந்நிகழ்வுக்கான ஒத்திகை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் ஒத்திகை நிகழ்ச்சியில் அனைத்து கலைஞர்களும் பங்குபற்றுமாறு கேட்கப்படுகின்றனர். ஓ

## நல்லூர் உற்சவகால ஆன்மீக நிகழ்வுகள்

(நல்லூர்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் நடாத்தப் பெற்று வரும் ஆன்மீக நிகழ்வுகளில் நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு ''சித்தர்களில் யோகர்'' எனும் பொருளில் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் நித்தியதசீதரனினின் சொற்பொழிவு இடம் பெறும்.

அத்துடன் ஆனைக்கோட்டை, சாவற்காடு அந்திக்குழி ஸ்ரீஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மற்றும் மாதகல் காந்திஜீ அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். ஓ

## திணைக்கள சாரதிகளுக்கான மூன்று நாள் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களில் தற்காலிக அமைய, பதிலீட்டு அடிப்படை, ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் சாரதிகளுக்கான 3 நாள் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சிநெறி எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 3 நாட்கள் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் 8.30 மணி முதல் 4.15 மணி வரை நடைபெறும்.

இப்பயிற்சி நெறியின்போது வழங்கப்படும் சான்றிதழ்கள் அவர்களின் பதவி நிரந்தரப்படுத்தலின் போது கவனத்தில் கொள்ளப்படும் என்பதனால் இப் பயிற்சி நெறிக்கு அழைக்கப்பட்ட சாரதிகளை கலந்துகொளள்ள ஏற்பாடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களை யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கோரியுள்ளார். ஓ

# கைகலப்பில் மூவர் படுகாயம்

(பொன்னாலை)

அராலியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்றில் விளையாடிய இரு கழகங்களின் ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட கைகலப்பில் மூவர் படுகாயமடைந்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, அராலி வடக்கு ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் 7பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் குலணையூர் கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழகமும் - அராலி தெற்கு ஏ.எல் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. போட்டியில் 1:1 என்ற கோல்களைப் போட்டுச் சம நிலையிலிருந்தது.

இந்நிலையில் இரு அணி ஆதரவாளர்களுக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பில் முடிந்துள்ளது.

இக் கைகலப்பில் அராலிக் கழகத்தைச் சேர்ந்த வி.ஜெயசீலன் (வயது -28), என். ஜீவராஜ் (வயது 16) ஆகிய இருவருடன் மற்றுமொரு சிறுவனுமே படுகாயமடைந் தவர்களாவர். இவர்கள் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதல் இடம்பெற்ற இடத்துக்கு விரைந்த இராணுவத்தினரும், வட்டுக்கோட்டைப் பொலிஸாரும் மோதலில் ஈடுபட்ட இரு தரப்பினரையும் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-49)

# சிறுப்பிட்டியில் இலவச கணனிக் கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறுப்பிட்டி வடக்கில் அமைந்துள்ள சிற்றி இன்ப மற்றிக் சென்ரர் நிறுவனத்தினரால் மாணவர்களின் நலன்கருதியும் அவர்களை இலத்திரனியல் உலகுடன் இணைக்கும் நோக்குடனும் இலவச கணனிக்கற்கை நெறியினை நடாத்தி வந்தனர்.

இக்கற்கைநெயியில் பயின்றோர் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் மீண்டும் கற்கும் ஆர்வலரின் நலன் கருதி புதியகற்கை நெறி ஆரம்பமாக உள்ளதாகவும் விண்ணப்பிக்க விரும்புவோர் இம் மாதம் 30 ஆம்திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் மேற்படி நிறுவனத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். ஓ

## தெய்வீக இசையரங்கு

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடாத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை திருமதி செல்வம் நாகராஜாவின் இசைக் கச்சேரி இடம்பெறும்.

அணிசெய் கலைஞர்களாக வயலின் செல்வி பாக்கியலட்சுமி நடராஜா, மிருதங்கம் வி. ரமணா ஆகியோர் பங்குபற்றுவார்கள். ஓ

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழபபாணம)

ஆவரங்கால் கிழக்கு புதுவை ஆலடி முருகன் தேவஸ்தான மகோற்சவ காலத்தில் சிவலிங்கயோக கேந்திரா நிறுவனத்தினரால் நடாத்தப்படும் ஆன்மீகச் சொற்பொழிவுகளில் இன்று செவ்வாய்க்கிழமை “மாணிக்க வாசகரும் திருவாசகமும்” எனும் தலைப்பில் சிதம்பரநாதன் சசீவன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

நாளை புதன்கிழமை “இந்து சமய இறைமைகள்” என்னும் தலைப்பில் சைவப் புலவர் கந்த சத்தியதாசன் சொற்பொழிவாற்றவுள்ளார். ஓ





யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ துறையினால் ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட மூலிகைக் கருத்தரங்கில் சித்த மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி விவியன் சத்தியசீலன் உரையாற்றுவதையும், டாக்டர் விஜயகுமார் மூலிகை வரை படத்தினை பாடசாலை உப அதிபரிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

# கட்டுப்பாடற்ற ஒலிபெருக்கிப் பாவனையால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஒலிபெருக்கிப் பாவனை கட்டுப்பாடற்ற முறையில் அதிகரித்துள்ளது.

ஆலய மஹோற்சவ காலங்கள், உற்சவ தினங்கள்,பொதுநிகழ்வுகள் போன்றவற்றில ஒலிபெருக்கி அதிக சத்தத்துடன் அதிகளவு நேரம் ஒலிக்க விடப்படுகின்றது.

இதனால் சூழல் மாசடைவதுடன், தற்போது நடைபெற்றுவரும் க.பொ.த.உயர்தரப் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்கள் பாடங்களை மீட்பதிலும், கற்பதிலும் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் தனியார் கல்வி நிலையங்கள், பாடசாலைகள் போன்றவற்றின் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஒலிபெருக்கிகள் இடையூறை ஏற்படுத்துகின்றன.

இவ்விடயம் சம்பந்தமாக பலதடவைகள் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் யாரும் நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை.

தற்போது நடைபெற்றுவரும் உயர்தரப் பரீட்சை காலத்திலாவது சத்தத்தைக் குறைத்து மாணவர்களின் கல்விக்கு உதவுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஓ-36)




## புற்றுநோயாளர்களுக்கான அன்பளிப்பு வழங்கல்

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நாளை புதன்கிழமை காலை 10.30 மணிக்கு சங்கானை பட்டினசபை வீதியில் உள்ள கலாசார மண்டபத்தில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஷ்பராசா தலைமையில் புற்றுநோயாளர்களுக்கான அன்பளிப்பு வழங்கல் நிகழ்வினை நடாத்தவுள் ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொள்ளும் புற்றுநோய் வைத்திய நிபுணர், வைத்திய கலாநிதி ந.ஜெயக்குமரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் ,வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வலி. மேற்கு பிரதேச செயலாளர் சி.புத்திரசிகாமணி, சங்கானைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சி.கனகசபாபதி, உடுவில் அ.மி.த.க.பாடசாலை அதிபர் சி.நடராசா, சங்கானை ப.நோ.கூ. சங்க தலைவர் ம.சிவசுப்பிரமணியம், ஈ.எஸ்.பி நிறுவன உரிமையாளர் பே.நாகரத்தினம் ,மூளாய் தென்னிந்திய திருச்சபை, குருமனை ரி.எஸ்.யோசுவா ஆகியோர் நோயாளர்களுக்கான அன்பளிப்புகளை வழங்கவுள்ளனர். ஓ

## கூட்டுறவு தினவிழா

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை நடாத்தும் 86வது சர்வதேசகூட்டுறவு தினவிழா கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் 24ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை தலைவர் பெ. கனகசபாபதிதலைமையில்நடைபெறஉள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோஜ் மகிழ் மகாதேவன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கைகள் பீடாதிபதி க.தேவராஜா, கௌரவ விருந்தினர்களாக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கனகசபாபதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். ஓ







சு.ஸ்ரீகுமரன் எழுதிய “செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்” நூல் வெளியீட்டு விழா பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றபோது, மூத்த எழுத்தாளர் சிற்பி சிவசரவணபவன் வெளியீட்டுரை நிகழ்த்துவதையும், ஓய்வுபெற்ற அதிபர் சி.நடராஜா, நூலாசிரியர் சு.ஸ்ரீகுமரன், பாடசாலைஅதிபர் திருமதி கி.சிவராஜா, பிரதி அதிபர் திருமதி இ.இராஜசேகரம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 72

### இடைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

அவரைப் பின்பற்றித் தாமோ தரம்பிள்ளை அவர்கள் தமிழ்நூல்கள் ஏட்டுப் படிவத்தில் சிதைந்து போகாது அச்சிற் பதித்துத் தமிழ் நாடெங்கும் ஒரு மறுமலர்ச்சி உண்டாக்கினார். அதனை வாய்ப்பாகக் கொண்டே இராசகோபாலபிள்ளை, பவானந் தம்பிள்



பியதாச சிறிசேன




அநகாரிக தர்மபால

ளை, உ.வே.சுவாமிநாத ஐயர் முதலாய தென்னிந்திய அறிவாளிகள் நூல்களை ஆராய்ந்து அச்சேற்றுவாராயினர்.

ஆறுமுகநாவலர் அவர்களை முன்னோடியாகக் கொண்டு வட இலங்கையில் சைவ சமய விழிப்புணர்ச்சி உண்டாகிப் பரந்தமை போலவே தென்னிலங்கையிலும் பாணந்துறை நகரிலே பௌத்த சமய அபிவிருத்திக்கான ஒரு நிகழ்ச்சி நடைபெறலாயிற்று. அங்கே வணக்கத்துக் குரிய ஸ்ரீ மகத்துவத்த ஞானானந்த தேரோ அவர்கள் எழுதிய கட்டுரையொன்று ரைம்ஸ்

**மீள் பார்வை**



கண்டிப் பிரதேசத்தின் கடைத்தொகுதி (CHARLES SEOWEN AND CO-1880)

பத்திரிகையில் வெளியாயிற்று. அக் கட்டுரை கேணம் ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் என்ற அமெரிக்கப் பெரியாரின் கவனத்துக்கும் எட்டிற்று. இலங் கையிலிதுகாறும் இல்லாத விழிப்புணர்ச்சி பௌத்தர்களி டையே ஏற்பட்டது.

பௌத்தர்களிடையே ஏற்பட்ட விழிப்பினால் பல பாடசாலைகள் உடனடியாக உண்டாக்கப்பட்டன. ஆனந்தாக் கல்லூரியின் பின் 1890 ஆம் ஆண்டளவில் ஐம்பதுக்கு மேற்பட்ட பாடசாலைகள் அவர்களால் நடாத்தப்பட்டன. அவற்றை உருவாக்குவதற்கு நடுவகுப்பார் தம்மாலான உதவிகளைச் செய்தார்கள். அவர்கள் உதவியால் பாடசாலைதள் கல்லூரிகளேயன்றிப் பௌத்த கலாபீடங்களான பிரிவேனாக்களும் உண்டாக்கப்பட்டன. வணககத்துக்குரிய ஸ்ரீ சுமங்கல தேரோ அவர்களின் தலைமை யில் வித்தியோதய



பிரிவேனா 1873 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அங்ஙனமே வணக்கத்துக் குரிய ஸ்ரீ தர்மாலோக தேரோ தலைமையில் வித்தியாலங்கார பிரிவேனா 1876 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது.

முன்சொன்ன அமெரிக்கப் பெரியாரான, ஒல்கொட் அவர்கள் சிறந்த போர் வீரனாயிருந்து அமரிக்க குடிப்போரில், கடமையாற்றிச் சிறந்த வீரருக்குரிய விருதுகள் பெற்று

**க.சி.குலரத்தினம்**

இராணுவத்திலிருந்து ஓய்வெடுத்துச் சமூக சேவைகள் செய்து வந்த காலத்தில் பிளவஸ்கி அம்மையாரின் தொடர்பால் தத்துவ ஞான சங்கத்தைக் கண்டு அதன் தலைவராயமர்ந்து நீகுறோவர் முதலாய உரிமையற்றோருக்குத் தொண்டு செய்வதில் தீவிரமாக ஈடுபடுவாராயினர். (தொடரும்)



திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் 2008/2009 ஆம் ஆண்டுக்கான உத்தியோகத்தர்களை தெரிவுசெய்யும் நிகழ்வில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுக் கழகத்தின் மருத்துவமுகாமிற்குத் தேவையான மருந்துப்பொருட்கள், வறுமைக்கோட்டுக்குட்பட்ட 15 பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பைகள் மற்றும் தண்ணீர்ப் போத்தல்கள், வறிய பார்வைக் குறைபாடுடைய முதியவர் ஒருவருக்கு கண்ணாடி வில்லை ஆகியன வழங்கப்பட்டன. இந்நிகழ்வின் படங்களைக் காணலாம்.

# யாழ்.குடாநாட்டில் ஆங்கிலமொழிக் கற்றல், கற்பித்தல் ② பிரயோக மொழியியலினூடாக ஓர் நோக்கு

பல்கலைக்கழகங்களிலும், ஏனைய உயர்கல்வி நிறுவனங்களிலும் அதே மாணவன் மீண்டும் ஆரம்ப கட்ட நிலையிலிருந்து ஆங்கிலமொழியைக் கற்கும் மேலதிகமான, சுமையான சந்தர்ப்பத்திற்கு திணிக்கப்படுகின்றான்.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள பிரதான இரண்டு நிலைகளையும் உற்றுநோக்குவோமெனில் எமது பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை சமச்சீரற்றதாகக் காணப்படுகின்றது.

பெரும்பாலான பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆங் கில ஆசிரியர்கள் அறவே இல்லாத குறையும் உணரக் கூடியதாகவுள்ளது. இக் குறை பாடுகளிற்கான காரணங்களை நாட்டின் பொருளாதார, அரசியல், சமூகப் பின்ன ணியில் வைத்தே ஆராயப்படவேண்டும்.

ஆனால், எமக்குக் கிடைக்கப்பெற்ற வளங்களை எப்படி மேலும் விருத்தி செய்யலாம் என்ற நிலையில் நாம் சிலவற்றை ஆராயலாம்.

### ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியரின் தோற்றமும் வாண்மை விருத்தியும்

ஓர் ஆங்கில ஆசிரியன் எப்படி உருவாகின்றான்? குறிப்பாக தற்பொழுது கல்வியியற் கல்லூரிகள் மூலம் ஆங்கில ஆசிரியர்கள் உருவாக்கப்படுகின்றார்கள்.

போட்டிப் பரீட்சைகள், நேர்முகப் பரீட்சைகள் மூலம் பதவிக்கு வரும் பயிற்றப்படாத ஆசிரியர்கள், கலாசாலைகளில் பயிற்றுவிக்கப்பட்டு பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக மீண்டும் பதவிக்கு வருகின்றார்கள்.

பல்கலைக்கழகங்களும், மற்றைய உயர்கல்வி நிறுவனங்களும் இவ்வாறு உருவாக்கப்படும் ஆங்கில ஆசிரியர்களின் கல்விப்புலவிருத்திக்கு ஓரளவு துணை நிற்கின்றன.

ஆங்கில பட்டதாரி ஆசிரியர்களின் தோற்றமானது, மற்றைய நெறிகளிற்குரிய பட்டதாரி ஆசிரியர்களின் நியமனத்துடன் ஒப்பிடும்பொழுது மிகச் சொற்பமாக, விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிலேயே காணப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களைப் பொறுத்த வரை ஆங்கில ஆசிரியர்களை உருவாக்கும் திறனில் இருந்து வேறுபட்டு உருவாக்கப்பட்ட பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களை உள்வாங்கி அவர்களின் பட்டப் படிப்பை மேற்கொள்ளுவதற்கு ஆவன செய்கின்றன.

இவ்வாறு உள்வரும் ஆசிரியர்கள், ஆங்கில இலக்கியம், மொழியியல், புதிதாக உருவாக்கப்பட்ட ஆங்கிலமொழிக் கற்பித்தல் போன்ற நெறிகளை தெரிவுசெய்து தமது மூன்று வருட பட்டப் படிப்பை நிறைவுசெய்கின்றனர். இவ்வாறு நிறைவுசெய்து வெளியேறும் பட்டதாரிகள் ஒரு வருடத்தில் குறைந்தது ஒன்றில் இருந்து மூன்று வரை இருக்கலாம்.

மேலும், கல்வியியற் கல்லூரிகளில் தமது நான்கு வருட கற்கைநெறியைப் பூர்த்தி செய்து வெளியேறும் ஆசிரியர்கள் பெரும்பாலும் தேசிய பாடசாலைகளிலும் நகர்ப்புற பாடசாலைகளிலும், நியமனம் பெற்றுச் செல்கின்றனர். தேசிய கல்வியியற் கல்லூரிகளின் மூலம் வருடா வருடம் நியமிக்கப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைந்த அளவாக அதாவது கிராமப்புற பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக இருப்பதில்லை. இத்தேவ்வை களைப் பூர்த்தி செய்வதற்கான மாற்று நடவடிக்கைகள் நிச்சயம் ஆராயப்படவேண்டும்.

கல்வியியலாளர்களும் கல்வித் திட்டமிடல் நிர்வாகமும் இதில் விசேட அக்கறை செலுத்தி கிராமப்புற பாடசாலைகளின் ஆங்கிலக் கல்வியின் தரத்தைப் போதிப்பதற்கு ஒத்தாசை புரியவேண்டும்.

இக் கட்டுரை பௌதீக வளங்களின் குறைபாட்டுத் தன்மைகளை மிக ஆழமாகச் சுட்டிக்காட்ட எழுதப்படவில்லை. ஆங்கில ஆசிரியர்களின் தொழில்சார் கல்விப்புல விருத்தியும் இதன்மூலம் எய்த முற்படும் முன்னேற்றகரமான அடைவுகள் பற்றியுமே குறிப்பிட முனைகின்றேன்.

ஆங்கிலமொழிக் கல்வி (ELE) ஆங்கில மொழிக் கற்பித்தல் (ELT) ஆகிய இரண்டு துறைகளும் இப்பொழுது உலகளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் கல்விசார் நெறிகளாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

இந் நெறிகளைப் பின்பற்றுவதன் முக்கிய நோக்கமாக தொழில்சார் அபிவி ருத்தி, மேம்பாடு என்பன துல்லியமாகக் காணப்படுகின்றன.

மற்றைய கோட்பாடு மையக் கல்விப் புலங்களைப் போல் இவை ஒரு குறிப்பிட்ட அடைவுக்குள் முடங்கிப் போகும் துறைகளும் அல்ல.

ஆனால் "ஆங்கில மொழிக் கற்பித்தல் (ELT) நெறியானது தற்காலங் களில் மேற்குலகக் கல்வியியலாளர்கள், பிரயோக சமூக உளவியல் மொழியியலாளர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு வகையான கோட்பாடுகளால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றன.

ஆங்கிலமொழிக் கற்பித்தல் அல்லது ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் என்ற துறை தற்காலங்களில் மிக முக்கியமாக மூன்று கோட்பாடுகளால் உள்வாங்கப்படுகின்றது அல்லது செல்வாக்குச் செலுத்தப்படுகின்றது.

அவையாவன

- ஆசிரியர்களின் இரண்டாம் மொழிக் கையாள்கை (Teacher Talk)
- இருமொழி தழுவிய மொழித்திறன் (Inter Language Competence)

**வ.பரந்தாமன்**
விரிவுரையாளர்,
ஆங்கிலமொழிப் போதனை நிலையம்,
யாழ். பல்கலைக்கழகம்.

- மாணவர்களிற்கு செலுத்தப்படும் மொழியின் அளவு (மொழி உள்ளீடு) பற்றிய கருதுகோள் (Input hypothesis)

(தொடரும்)

# மலேஷிய இடைத் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் போட்டி

(கோலாலம்பூர்)

மலேசியஎதிர்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிம் அந்நாட்டு இடைத் தேர்தலில் பெனாங் மாகாணத்தில் போட்டியிடவுள்ளார்.

இந்நிலையில் அன்வர் இப்ராஹிம் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆதரவாளர்கள் புடை சூழ பெர்மாதங் போ தொகுதி யில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

கடந்த மார்ச் மாத பொதுத் தேர்தலில் அன்வர்இப்ராஹிம் எதிர்கட்சி கூட்டமைப் பானதுகணிசமான மக்கள் ஆதரவை பெற் றிருந்தது. அரசாங்க வேட்பாளரான ஆரிப் ஷாஓமருக்கு ஆதரவளிக்கும்வகையில் கூடியிருந்த சுமார் 4ஆயிரம் பேருக்கும் எதிர்க்க்ட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல்கள் இடம்பெறுவதை தடுக்குமுகமாக அங்கு சுமார் மூவாயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

மேற்படி பேர்மாதங் போ தொகுதியில் 1982ஆம் ஆண்டிலிருந்து 1999ஆம் ஆண்டு சிறை செல்லும் வரை, அன்வர் இப்ராஹிம் (61வயது) வெற்றியாளராக திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த தேர்தலில் மேற்படி தொகுதியில் போட்டியிட்ட அன்வர் இப்ராஹிமின் மனைவி வான் அஸிஸா வான் இஸ்மாயில், தனது கணவர் இடைத் தேர்தலில் போட்டியிட வழி யேற் படுத்தித் தரும் முகமாக அண்மையில் தனது பதிவியை இராஜினாமா செய்திருந் தார். (ஓ-6)

# பாகிஸ்தானின் அடுத்த ஜனாதிபதியாக பெண்ணொருவர் தேர்ந்தெடுக்கப்படலாம்

பாகிஸ்தானின் அடுத்த ஜனாதிபதியாக பெண்ணொருவர் தெரிவு செய்யப்படலாம் என பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத் தலைவர் அஸிப் அலி சர்தாரி தெரிவித்தார்.

ஏ.ஆர்.வை செய்திச் சேவைக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியிலேயே சர்தாரி இவ்வாறு தெரிவித்தார். எனினும், ஜனாதிபதித் தெரிவானது ஆளுங் கூட்டமைப்பாலேயே மேற்கொள்ளப்படும் என அவர் கூறினார்.

## உலக தரிசனம்

மேலும், மேற்படி பதவி நிலைக்குத் தான் வருவதாக கூறப்படும் கருத்துக்களுக்கும் அவர் மறுப்புத் தெரிவித்தார். நான் ஜனாதி பதியாக வர விரும்புவ தாக இருந்தால் ஏற் கனவே பிரதமராக வந் திருப்பேன் என அவர் கூறினார்.

முஷாரப் கண்டனத் தீர்மானத்தை எதிர் கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் ஜனநாய கம் வெற்றிபெறும் எனத் தெரிவித்த அஸிப் அலி சர்தாரி, முஷாரப் விவகாரம் உட்பட அனைத் துப் பிரச்சினைகளுக்கும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்பட் பின்னர் பாகிஸ்தான் வரலாற்றின் புதிய் அத்தியாய மொன்று எழுதப்படும் என்று கூறி னார்.



எதிர்காலத்தில் ஜனாதி பதியாக தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு வரும் பாராளுமன் றத்துக்கு பதில் கூற வேண்டியவராக இருப்பர் என அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், பாகிஸ்தானின் ஆளுங் கூட்டமைப்பானது பதவி விலகுவதா அல்லது கண்டனத் தீர்மானத்தை எதிர்கொள்வதா என முடிவு செய்ய ஜனாதிபதி முஷாரப்பிற்கு 24 மணிநேர காலக்கெடுவை சனிக்கிழமை விதித்திருந்தது. (ஓ-6)

# மதுச்சாலையில் காவலாளியாக பணியாற்றிய இளவரசர் ஹரி

பிரித்தானிய முடிக்குரிய இளவரசர்களின் வரிசையில் மூன்றாவது நிலையிலுள்ள இளவரசர் ஹரி ஆபிரிக்க மதுச்சாலை யொன்றில் காவலாளியாக பணியாற்றியது தொடர்பான செய்தி வெளி யாகியுள்ளது.

தனது இராணுவ சகாக்களுடன் இரு வார பயணத்தை மேற்கொண்டு ஆபிரிக்கா சென்ற இளவரசர் ஹரிஅநாதைச் சிறுவர் களுக்கான பாடசாலையொன்றை கட்டு வதற்குநிதியுதவியளிக்கும் வகையிலேயே அங்கு லெஸோதோவிலுள்ள ஹொபின் மதுச் சாலையில் காவலாளியாக பணி யாற் றியதா தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# ரொக்கெட்டை வெற்றிகரமாக ஏவி ஈரான் விஞ்ஞானிகள் சாதனை

ஈரானில் சமீப காலமாக விஞ்ஞான வளர்ச்சி வேகமாக உள்ளது. ஏற்கனவே அவர்கள் அணுகுண்டு தயாரித்து வருவதாக சர்ச்சை கிளம்பியுள்ளது. இந்த நிலையில் சொந்த மாக ரொக்கெட்டை தயா ரித்து அதன் மூலம் செயற்கைக்கோள் ஒன்றை வெற்றி கரமாக விண்ணில் ஏவி உள்ளது. இதற்கு முன்பு ஈரான் தங்கள் நாட்டுக்கு தேவையான செயற்கைகோள்களை ரஷிய ரொக்கெட்டுகள் மூலமே அனுப்பிவந்தது.

ஈரான் விஞ்ஞானிகள் சொந்தமாகவே ரொக்கெட்டை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட் டனர். அது முழுமை அடைந்து கடந்த சனிக் கிழமை விண்ணில் ஏவினர். அதில் தகவல் தொடர்பு செயற்கைகோள் ஒன்றும் அனுப்பப் பட்டது. அது குறிப்பிட்ட சுற்றுவட்ட பாதையை வெற்றிகரமாக சென்றடைந்தது.

இப்போது செயற்கை கோள்களை அனுப்ப ரொக்கெட் தயாரித்தாலும் இதே ரொக்கெட் டுகளை மாற்றம் செய்து ஏவுகணைகளை உருவாக்கமுடியும். ஏற்கனவே ஈரான் அணு குண்டு தயாரித்து வருவதால் இந்த ஏவுகணை மூலம் அணுகுண்டுகளை வீச வாய்ப்புள்ள தாக அமெரிக்கா கூறிஉள்ளது. (ஓ-6)

# முன்னாள் ஜனாதிபதிக்கு மரண தண்டனை

(இஸ்லாமாபாத்)

சாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஹிஸென் ஹப்ரேக்கு, அந்நாட்டு அரச்சாங்கத்தை கவிழ்க்கத் திட்டமிட்மைக்காக நீதிமன்ற மொன்று மரண தண்டனை விதித்துள்ளது.

1990 ஆம் ஆண்டு பதவியிலிருந்து அகற்றப்பட்டது முதற் கொண்டு நாடு கடந்த நிலையில், செனகலில் ஹிஸ்ஸென் ஹப்ரே வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

8வருட காலம் பதவியிலிருந்த ஹிஸ் ஸென் ஹப்ரே, தற்போதைய ஜனாதிபதி ஜட்றிஸ் டெபியால் மேற்கொள்ளப்பட் எழுச்சி நடவடிக்கையையடுத்து ஆட்சி கவிழ்க்கப்பட் டார். (ஓ)

# மரண அறிவித்தல்

கடற்கரை வீதி, பருத்தித்துறையை நிரந்தர முகவரி யாகக் கொண்ட திருமதி வின்சன் டீ போல் பிலோமினா 17.08.2008 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற கஷ்மீர், ரோசம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பிரான்சிஸ், பெர்ண தேத்தம்மாவின் மருமகளும், திரு வின்சன் டீ போல் (கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர்-பருத்தித்துறை கிழக்கு, புனித தோமையார் ஆலய அருட்பணிச் சபைபொருளாளர், மந்திகை ஆதர வைத்தியசாலை அபிவிருத்தி சங்க நிர்வாக உறுப் பினர், ஹாட்லி பழைய மாணவர் சங்க உபதலைவர், சென்தோமஸ் பெண்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்) அவர்களின் அன்பு மனைவி யும் அலெக்ஸ் போல் (பிரான்சிஸ் ரேட்ஸ், பருத்தித் துறை), லூயிஸ் போல் (கனடா), றொபேட்போல், ஜேக்கப்போல் (கனடா), பீற்றர் போல் (லண்டன்), எட்மன் போல் (வின்சன் நியூ ரேடர்ஸ், கொழும்பு), றெக்ஸ்போல் (வின்சன் சேட் சென்ரர் பருத்தித் துறை), டக்ளஸ் போல் (பிரான்சிஸ் ரேடர்ஸ், யாழ்ப் பாணம்), மேரி டிலாந்தி ஆகியோரின் பாசமிகு தாயா ரும், மேரி யூடிற்றா, சுதர்சினி, வசந்தகுமாரி, நிரஞ்சனா, சிந்துஜா, ரோகினி, ராஜி, கிறிஸ்ரியன் ஆகியோரின் அன்பு மாமியாரும், றைஷன் போல், றைஷாஜினி, பிறின்ஷா, றனுஷன் போல், லீஷா, சின்சியா, றெக் ஷிகா, றொக்ஷன் போல், பிறின்சிகா, சுஜேபோல், றெவின் போல், மேரிடிஷானி, மேரி தொம்சிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19.08.2008 (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 2.30 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப் பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, கோரியடி சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

1611

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 24 ✶ 08 ✶ 1940 |  | 17 ✶ 08 ✶ 2008 |

**திருமதி . வின்சன் டீ போல் பிலோமினா (பேபி)**

இவ் அறிவித்தலை அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

றோஸ்கொட்
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

T.P. 2263129

தகவல்
குடும்பத்தினர்.

# புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்களை இரகசிய ஆவணங்களாகவே கருதவேண்டும்

## பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்று முடிந்த் நிலையில் அப்பரீட்சை வினாத்தாள்களை அறிவித்தல் வழங்கும் வரை இரகசிய ஆவணங் களாகக் கருத வேண்டும் என்று பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க பணித்துள்ளார்.

பொதுப் பரீட்சைகள் சட்டத்திற் கிணங்க பரீட்சை குறித்த வினாத் தாள்களையோ வினாத்தாளின் பகுதியையோ அல்லது பகுதியையோ பிரதி பண்ணுதல் போட்டோ பிரதி எடுத்தல், பிரதி அச்சடித்தல், விற் பனை செய்தல். தம் கைவசம் வைத் திருத்தல் வேறு விதமாகப் பிரசுரம் செய்தல். வேறு ஒருவருக்கு வழங் குதல் என்பன முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

பாடசாலைகளுக்கு மாணவர் களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாண வர்களுக்கு உதவிப் பணம் வழங்கு வதற்குமாக நடத்தப்பட்ட இவ்வாண் டின் 5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கடந்த ஞாயிற்றுக் கிழமை 2ஆயிரத்து 626 பரீட்சை நிலையங்களிலும் 491 இணைப்பு நிலையங்களிலும் நடைபெற்றன.

இம்முறை இப்பரீட்சையில் 2 இலட்சத்து 16 ஆயிரத்து 484 சிங் கள மொழிமூல மாணவர்களும் 70 ஆயிரத்து 323 தமிழ் மொழி மூல மாணவர்களுமாக 2 இலட்சத்து 86ஆயிரத்து 807 பரீட்சார்த்திகள் தோற்றினர்.

பரீட்சைக்குத் தோற்றிய மாண வர்களது பெற்றோர்களும் பாதுகாவ லர்களும் பரீட்சை மண்ட பத்திற்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# நாட்டில் அரசியல் மாற்றம் காலத்தின் தேவையாகவுள்ளது

## எஸ்.பி.திஸாநாயக்கா

நாட்டில் அமைதி இல்லை சமூக பொருளாதார கல்வி கலை கலா சார அம்சங்கள் சீரழிந்து வருகின் றன. பண வீக்கம் பொருளாதாரக் கொள்கை. விலை வாசி உயர்வு, வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை குறைந்து வரும்சமூக நீதிகள், வேலையின்மை போன்ற காரணி களால் மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நாட்டில் அரசி யல் மாற்றமொன்று காலத்தின் தேவையாக உருவெடுத்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தேசிய அமைப்பாளர் எஸ். பி. திசாநாயக்கா கூறினார்

சப்ரகமுவ மாகாண சபைத் தேர் தலில் கேகாலை மாவட்டத்தில் ஐக் கிய .தேசியக் கட்சி சார்பில் போட்டி யிடும் வேட்பாளர்களை ஆதரித்து வரக்காப்பொல பகுதியில் பல இடங் களில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திசாநாயக்க மேற்கண்டவாறு கூறி னார்.

அக்கூட்டங்களில்அவர்தொடர்ந்த உரையாற்றுகையில் கப்பம் கடத் தல் அச்சுறுத்தல் காரணமாக சமூ கங்கள் மிக அச்சத்துடன் வாழ்ந்து வருவதை மிக வெறுப்புடன் அவ தானித்து வருகின்றோம். ஐக்கிய தேசி யக் கட்சி இத்தகைய சம்பவங்களை வன்மையாகக் கண்டிக்கிறது. (ஓ-6)


## கேள்வி அறிவித்தல்

## ஸ்ரீ லங்கா ரெலிகொம் பொ.வ.க.

சித்தங்கேணியில் சீடிஎம்ஏ அடிப்படை செலுத்தீட்டு நிலையத்துக்கான காணித் துண்டைக் கொள்வனவு செய்தல்

கேள்வி இல: L8/115/Land/2008.

ஸ்ரீலரெயின் சீடிஎம்ஏ அடிப்படைச் செலுத்தீட்டு நிலையத்தை நிறுவுவதற்காக யாழ்ப்பாணத்தில் சித்தங்கேணிச் சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரத்தினுள் அமைந்துள்ள ஒரு காணித்துண்டைக் கொள்வனவு செய்வதற்காக அவற்றின் உரிமையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி நிலமானது 15-20 பேர்ச் விஸ்தீரணம் உடைய தட்டை நிலமாக இருத்தல் விரும்பற்பாலது. பிரதான வீதியில் இருந்து இலகுவில் செல்லக்கூடியதாக இருப்பதுடன் உட்புகுவீதியானது கனரக வாகனங்களை ஓட்டிச் செல்லக் கூடிய அளவு அகலமாக இருத்தல் வேண்டும்

விண்ணப்பங்களை அனுப்ப விரும்புவர்கள் இடத்தின் முகவரி, நில அளவை வரைப்படம், உறுதி ஆகியவற்றின் பிரதிகள், விற்க விரும்பும் விலை ஆகிய விபரங்களை கடித உறையில் இட்டு புதிவுத்தபால் மூலம் கிழேயுள்ள முகவரிக்கு 2008 செப்டம்பர் 2 ஆம் திகதி 14.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்க வேண்டும் அல்லது இதனை சீரிஓ கட்டிடம், ஸ்ரீலங்கா ரெலிகொம் பொ.வ.க. லோற்றஸ் வீதி, கொழும்பு 01 இல் உள்ள கொள்வனவுப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இட வேண்டும்.

கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "சீடிஎம்ஏ அடிப்படைச் செலுத்தீட்டு நிலையத்துக்கு நிலத்தை கொள்வனவு செய்தல்-சித்தங்கேணி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தலைவர்,
கொள்வன்வுப் பகுதி கனிஷ்ட கேள்விச் சபை,
சிரிஓ கட்டிடம்
ஸ்ரீலங்கா ரெலிகொம் பொ.வ.க
லோற்றஸ் வீதி
கொழும்பு - 01.

www.slt.lk

Sri Lanka Telecom


## நல்லூரான் திருவடிக்கு இன்று பதினைந்தாம் திருவிழா



### நம்மிடம் எப்போ வருவாய்

வல்ல குமரா நல்லை ஊர் கந்தா
வடிவே உருவான வள்ளலே
செல்வ மகனே கார்த்திகை பெண்கள்
ஒன்றி ணைத்த ஆறு முக நாதனே
மயில் வாகனத்தில் வலம் வந்தவனே
வள்ளி தெய்வா னையுடன் வலம்
வந்தாய் நம்மிடம் எப்போ வருவாய்
சேவல் கொடியுடனே வலம்புரி சங்கூதி வாவா!

*அல்வையூர் கவிஞர்*
*ம.கணேசலிங்கம்*

### இரங்கிடு முருகா!

மனத்துயருள் மறைந்த உள்ளங்கள்
மணியோசை கேட்டு மகிழ்ச்சி கொண்டன!
அணி அணியாக ஆலயம் வந்து
பணி செய் மாந்தர் பாவம் போக்கிட
இனியேன் தாமதம் இரங்கிடு முருகா!

*ஜெயக்குமாரி கந்தவேள்*

### மனங்கவர் வள்ளிக் கந்தா

சினமிகு சூரனைக் கொன்று
தேவரி னிடுக்கண் தீர்த்தோய்!
மனங்கவர் வள்ளிக் காக
மலரடி நோவச் சென்று
தினைப்புலம் காத்து நின்ற
சிற்றினட் யாளைக் கிட்டி
மனத்தினை மயக்கி வென்ற
மாண்பையு மறவோம் நாமே

*சி.வெற்றிவேலு*

### பக்தர் துயர் தீர்க்க தாமதமேன்

தேவர் சிறை மீட்ட நாதனே
தேம்பி அழுவது கேட்குதா
பாவ வினை தீர்க்கும் வேலனே
பக்தர் துயர் தீர்க்க தாமதமேன்
காவல் செய்கின்ற கந்தனே
கருணை மனுவை நீ ஏற்காயோ
சேவல் கொடியை யுடைய குமரனே
சேரும் பகைதனை ஒழிக்காயோ
தேசம் சுமந்திடும் துயரினை
தேவ தேவே நீ நீக்காயோ

*அ.கலாநிதி*

### ஆறு முகத்துள் எத்தனை முகங்கள்

வானோரின் குறைதீர்த்த வீரமுகமொன்று
வள்ளியை மணம் புரிந்த வண்ணமுகமொன்று
கானமயில் மீதினிலே! யமர்ந்த முகமொன்று
கருணைக் கடலெனவே! வந்தமுகமொன்று
சிவனான தந்தைக்கு ஓமுரைத்த முகமொன்று
சிவசக்தி மடிமீதே அமர்ந்த முகமொன்றே!
கலைமிகுந்த நல்லையிலே அமர்ந்தமுகமொன்றே!

*கவிஞர் சரசாலையூரான்*

### சமாதான நாயகனாய் வா

வள்ளி கணவனுக்கு வாஞ்சையுடன்
வடக்கிருந்து எழுது கின்றேன்
எல்லை மீறும் துயரடக்கென்று
எத்தனையோ முறை கத்திக் கேட்கின்றோம்
புள்ளி மயில் வாகனனே
புதுமைகளை செய்யென்று கேட்கின்றோம்
துள்ளிவரும் வேல்தானே எங்களுக்கு
துணையென்று காலமெலாம் காத்திருக்கின்றோம்

*ஈழத்தரசன்*

# மாகாணசபைத் தேர்தலை யொட்டி அரசு தேர்தல் வன்முறைகளை கட்டவிழ்த்துள்ளது

## ஐ.தே.க. எம்.பி திஸ்ஸ அத்தநாயக்கா

வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் ஐ.தே.க.வெற்றி பெறும் என்று தேசிய புலனாய்வுத்



துறை அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இதனால் ஆத்திரமடைந்த அரசாங்கம் தேர்தல் வன்முறைகளை கட்ட விழ்த்து விட்டுள்ளது.

இத் தகைய வன்முறைகளை தடுக்க அரசியல் பேதங்களை மறந்து ஓரணியில் சகலரும் இணைய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும் கண்டி மாவட்ட எம். பி.யுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வன்முறைகள் கட்டுக் கடங்காது போனால் சட்டத்தை பொது மக்கள் கையில் எடுக்கும் பயங்கரமான சூழல் உருவாகும் என்று அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார் இங்கு அவர் மேலும் தெரிவித்தாவது,

கடந்த வாரம் தேசிய புலனாய்வுத் துறையினர் ஜனாதிபதி மாஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கிய இரகசிய அறிக்கையில்,

மாகாணசபைத் தேர்தல் ஐ.தே.க.வுக்கு சாதகமாக அமையப் போகின்றது என கூறியுள்ளது. இதன் பின்னரான அமைச்சரவைக் கூட்டத்தின் போது அமைச்சர்கள் மீது வசை பாடிய ஜனாதிபதி எந்த விதத்திலாவது தேர்தல்களில் வெற்றிபெற வேண்டுமென தெரிவித்துள்ளார்.

அதன் வெளிப்பாடாகவே ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி.உட்பட எதிர்க் கட்சிகள் மீது தேர்தல வன்முறைகள் வகைதொகையின்றி அதிகரித்துள்ளன. நிவித்திகலை, எகடவத்துவ, ரம்புக்கணை, தம்புத்தேகம பிரதேசங்களில் ஆயுதக்குழுக் களின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளன. இப்பகுதி மக்கள் வாக்களிக்கக் கூடாதென அச்சுறுத்தப்படு கின்றார் கள். ஏனைய எந்தவொரு கட்சியும் பிரசாரங்களை மேற்கொள்ள முடியாது தடுக்கப்படுகின்றனர்.

பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தால் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதாக தெரிவிக்கின்றனர்.

வன்முறையாளர்களை கைது செய்வதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் பொலிஸார் மேற்கொள்ளாதுள்ளனர்.

அரசாங்கத்தின் அழுத்தங்களால் வன்முறையாளர்களுக்கு எதிராக எதனையும் மேற்கொள்ள முடியாது பொலிஸார் கையா லாகாதவர்களால் இருக்கின்றனர்.

அரசாங்கம், பொலிஸ் இராணுவம். அனைத்தும் எமக்கு சொந்தமாகவுள்ளன. எனவே வாக்குப் பெட்டிகளை நிரப்புவது கடினமான விடயமல்ல என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்த கமகே தெரிவித்துள்ளார்.

வன்முறைகளை தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவிட் டுள்ளார். ஆனால் அது நடைமுறைப் படுத்தப்படுவதில்லை.

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் உத்தரவுகள் மதிக்கப்படுவதில்லை. சட்டத்தையும் மதிக்காது நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆயிரத் திற்கும் மேற்பட்ட அரச வாகனங்கள் தேர்தல் பிரசாரங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் நூற்றுக்கு மேலான வாகனங்கள் இரத்தினபுரியில் நடமாடுகின்றன.

அரசாங்க உத்தியோகபூர்வ விடுதிகளில் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட குண்டர்கள் தங்கவைக்கப் பட்டுள்ளனர். சமுர்த்தி நிவாரணம் பெறும் ஐ.தே.க. ஆதரவாளர்கள் அச்சுறுத்தப்பட்டு நிவாரண அட்டைகளை பறிமுதல் செய்யும் திட்டமும் முன்னெடுக்கப் படுகிறது. இதன் மூலம் ஐ.தே.கட்சிக்கு வாக்களிப்பதை தடுப்பதே நோக்கமாகும்.

சமுர்த்தி நிவாரண அட்டைகளை எவருக்கும் வழங்க வேண்டாம். அவ்வாறு பறி முதல் செய்யப்பட் டால் ஐ.தே.கட்சியால் வழங்கப்படும் சத்தியக் கடதாசியை நிரப்பிக்கையளியுங்கள். அதனை பயன்படுத்தி சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். எந்த விதமான அச்சமும் இல்லாமல் மக்கள் தமது வாக்குகளை வழங்க வேண்டும்.

தேர்தல் தினத்தன்று வாக்குக் கொள்ளையில் ஈடுபடுவதற்கான அனைத்து திட்டங்களையும் அரசாங் கம் தயார்படுத்தியுள்ளது. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் சர்வமதப் பேரவை மக்கள் தமது வாக்குரிமையை சுதந்திரமாக வழங்குவதற்கான சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென கோரியுள்ளதோடு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அந்த அழைப்பை விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் வாக்குக் கொள்ளைக்கு வன்முறைகளுக்கு எதிராக அனைத்து அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், பொது மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை தடுத்து நிறுத்த முன்வர வேண்டும்.

அரசாங்கத்தின் வன்முறைகள் கட்டுக்கடங்காது போனால் சட்டத்தை பொது மக்கள் தமது கையில் எடுக்கும் பயங்கரமான சூழல் உருவாகும். பொலிஸாருக்கு அவர்களது சேவையை முட்டுக்கட்டையின்றி மேற்கொள்ளவும் அத் தொழிலின் கௌரவத்திற்கும் அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும். (ஓ-6)


## BOC மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 30.11.2007 ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 31.05.2007ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத்திகதி இடம், நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை | யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை யாழ்ப்பாணம். 2008 செப்ரெம்பர் 6ஆம் (சனி) 7ஆம் (ஞாயிறு) திகதிகளில் காலை 9.30 மணிக்கு |
| யாழ் 2ஆம் மேற்தரக்கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காரைநகர் | |
| சுன்னாகம் (அச்சுவேலி விரிவாக்கற்கிளை உட்பட) | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (வேலணைவிரிவாக்கற்கிளை உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி (வடபிராந்தியம்)
உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 222 3126
021 222 2735

(சி/1416)


# நாட்டில் போஷாக்கின்மையால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டிலுள்ள சிறுவர்களில் 22 வீத மானோர்குறை நிறையுடையவர்களாகவும் 18 வீதமானோர் வளர்ச்சி குன்றியவர்களாகவும் 15 வீதமானோர் மெலிவடைந்தவர்களாகவும் உள்ளதாகவும்ஆய்வு முடிவு ஒன்று அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

சுகாதாரப் பராமரிப்புமற்றும் போஷணை அமைச்சினால் மேற்கொள் ளப்பட்ட ஆய்விலேயேஇந்த முடிவு கிடைத்துள்ளது.

இந்த ஆய்வில் மோதல் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய 5 மாவட்டங்களும் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை2015ஆம் ஆண்டளவில் ஐ.நா வின் மிலேனியம் இலக்குகளை அடையும் சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதாக யுனி செப் தெரிவித்திருந்த நிலையிலேயே மேற்படிஆய்வு முடிவுகள் வெளியாகியுள்ளன.

பாரிய மோதல்கள், இடம் பெயர்வுகளைச்சந்தித்த திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களும் வறிய நிலையிலுள்ள பதுளை, நுவரெலியா, மொனராகலை, அம்பாந் தோட்டை, மாவட்டங்களிலேயே சிறுவர்கள் மோசமாகபாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுமுடிவுகள் காண்பிக்கின்றன.

நுவரெலியாவில்41வீதமான சிறுவர்கள் வளர்ச்சிகுன்றியவர்களாக வும் திருகோணமலை மாவட்டத்தில் 28 வீதமான சிறுவர்கள் மெலி வடைந்தவர்களாகவும் பதுளையில் 32 வீதமானசிறு வர்கள் குறை நிறையுடைவர்களாகவும் உள்ளதாக ஆய்வுமுடிவுகள் தெரிவித்துள்ளன.

அரிசி, பாண் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்தமையும் சிறுவர்களின் போஷணைக் குறைபாட்டுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளதாக தொண்டு நிறுவனமொன்றின் சுகாதாரப் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளைநீண்ட காலமோதல்கள்பாரியஇடம் பெயர்வுகளால் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் மோசமாகபாதிக்கப்பட்டுள்ளன. சுனாமி அனர்த்தமும் இப் பகுதிகளை விட்டு வைக்கவில்லை.

எனவே கிழக்கு மாகாணத்திலுள்ள சிறுவர்களின்போசனை நிலைகீழ் மட்டத்தில்காணப்படுவதில் ஆச்சரியமில்லை என தொண்டு நிறுவன மொன்றின்ஆய்வு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதே வேளை உணவுப் பொருட்களின் விலையேற்றம் தாய்மார், சிறுவர்களைஎவ்வாறுபாதித்துள்ளது என்பது தொடர்பில் ஆய்வு ஒன்றை மேற்கொள்ள அரசாங்கமும் உலக உணவுத்திட்டம் மற்றும்யுனிசெப் என்பன இணைந்து முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## திறந்த வெளிச் சிறைச்சாலைகள் நிர்மாணிக்கத் திட்டம்

மூன்று வருடங்களுக்கு குறைவான சிறைத் தண்டனைக்குள்ளான கைதிகளை விவசாய நடவடிக்கையில் ஈடுபடுத்த சிறைச்சாலைகளில் திணைக்கழகம் தீர்மானித்துள்ளது.

இதற்கு ஏற்ற வகையில் திறந்த வெளிச்சிறைச்சாலைகள் எண்ணிக்கை அதிகரிப்பதற்கும் தீர்மானித் துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் வஜிர விஜய குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்பொழுது உள்ள திறந்த வெளி சிறைச்சாலைகளுக்கும் மேலதிகமாக எம்பிலிப்பிட்டிய, கிரிபாவ, மகவா ஆகிய பகுதிகளிலும் திறந்த வெளி சிறைச் சாலைகளை தீர்மானிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ)


## CITY INFORMATICS CENTRE

### மீண்டுமோர் அரிய சந்தர்ப்பம்
### இலவசக் கணனிக் கற்கை நெறி ஆரம்பம்

வலி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் சிறுப்பிட்டி வடக்கில் அமைந்துள்ள சிற்றி இன்பமற்றிக் சென்ரர் நிறுவனத்தினர் மாணவர்களின் நலன்கருதியும் அவர்களை இலத்திரனியல் உலகுக்கு இட்டுச்செல்லவும் இலவசக் கணனிக் கற்கை நெறியினை வழங்கி வருகின்றனர்.

இக் கற்கைநெறிக்கு அடுத்த கட்டமாகவும் 50 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். இதற்கு விண்ணப்பிக்க விரும்பு வோர் எதிர்வரும் 30.08.2008ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப் பிக்கவும். அத் திகதிக்கு பின்னர் வரும் அனைத்து விண்ணப் பங்களும் நிராகரிக்கப்படும். இதுவரை இலவச கற்கைநெறி யினை மேற்கொண்டவர்கள் சான்றிதழ் பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

(1610) தொ.பே. இல 0214591765



## பகிரங்க ஏலவிற்பனை

யாழ்.சுங்கத்திணைக்களத்தின் பொறுப்பிலுள்ளபின்வரும் பொருட்கள் 25.08.2008 ஆம்திகதி மு.ப10.00மணிக்குயாழ் செயலக வளாகத்தில் பகிரங்கஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளன.

1.கண்ணாடிஇழை வள்ளம் -நீளம் 18அடி4அங்குலம்-1
2. 'செய்யது'பீடி அடங்கிய பொதிகள்-30

இவ்ஏலவிற்பனையில் பொருட்களைப் பெற்றுக் கொண்டவர்கள் அன்றைய தினமே அவற்றுக்குரிய மொத்தப் பணத்தையும் செலுத்திபொருட் களை செயலக வளாகத்திலி ருந்து அகற்றுதல்வேண்டும்.

மேற்படி பொருட்களைபார்வையிட விரும்புவோர்18.08.2008 தொடக்கம் 22.08.2008வரையுள்ள காலத்தில் மு.ப 9.00- பி.ப3.00வரையுள்ள அலுவலக நேரத்தில் செயலகநிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

க. கணேஷ்
அரசாங்கஅதிபர்.
யாழ் மாட்டம்.

சி1415

வயிறுதான் காலைச் சுமக்கின்றது.
வார்த்தையால் வயிற்றை நிரப்ப முடியாது.
~ அப்துற் ~ றஹீம்

வலம்புரி

## வன்னி மக்களுக்கான நிவாரணப் பணி அனைத்துக் குரல்களும் ஒலிக்கட்டும்

வன்னிப் பெருநிலப் பரப்பில் ஏற்பட்டுள்ள மோதல்களையடுத்து அங்குள்ள மக்கள் சொல்லொண்ணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

அவர்களுக்கான நிவாரணப் பணிகள் முன்னெடுப்பதில் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் முன்வர வேண்டும் எனக் கோரிக்கைகள் விடப்பட்டும் எதுவும் நடந்தபாடில்லை.

படைத் தரப்பின் அனுமதி கிடைக்காததனால் நிவாரணப் பணியை மேற்கொள்ள முடியாதுள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் அவல நிலையைப் போக்குவதற்கு மனித நேய அமைப்புக்கள் அனைத்தும் குரல் கொடுத்தாக வேண்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெறும் மோதல்கள் காரணமாக ஏற்கன்வே இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் மீண்டும் இடம்பெயரும் துர்ப்பாக்கிய நிலை வேதனைக்குரியதாகும்.

எனவே இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணப் பணியை மேற்கொள்வதுடன் யுத்தத்தை நிறுத்தி மனித அவலத்தைத் தடுக்கச் சர்வதேச அமைப்புக்களும் சர்வதேச நாடுகளும் முன்வர வேண்டும்.

நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டாலும் யுத்தம் தொடருமாயின் அதனால் எவ்வித பயனும் ஏற்பட மாட்டாது. ஆகவே நிவாரணப் பணி முன்னெடுக்கப்படும் அதே.சமயம் யுத்த நிறுத்தமும் அமுலுக்கு வரவேண்டும்.

இல்லையேல் மோதல்கள் மற்றும் விமான-எறிகணைத் தாக்குதல்களில் பொதுமக்கள் சிக்கி உயிரிழக்கும் அபாயம் ஏற்பட வாய்ப்புண்டு.

வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்தத்தை முன்னெடுத்துள்ள அரசு, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

பொதுமக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள இடங்களுக்கு அண்மையாக விமானத் தாக்குதல்களும் எறிகணை வீச்சுக்களும் நடந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் மரண பயத்துடனேயே வன்னி மக்கள் உள்ளனர். மனிதாபிமானம் பேசும் ஐ.நா. சபை உள்ளிட்ட அமைப்புக்கள் தொடர்ந்தும் மௌனம் காக்காமல் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து பொதுமக்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

# அரசின் பயங்கரவாதத்தை ஒழிக்கும் முயற்சியினால் புலிகள் என்னைக் கொல்வதற்கு முயற்சி

## -ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு-



அரசாங்கம் பயங்கரவாதத்தினை முற்றாக ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்மையினால் புலிகள் என்னைக் கொல்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில் தெற்கில் சில அரசியல்வாதிகள் அரசியல் இலாபம் கருதி தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வருவது கவலையளிக்கின்றது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்க்ஷ தெரிவித்தார்.

கண்டிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்க்ஷ மல்வத்தை மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், அஸ்கிரிய மகாநாயக்க தேரர், உடுகம ஸ்ரீ புத்திரகித்த ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். இச் சந்திப்புக்களின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக மாணவர்களை அரசியல்வாதிகள் சுயநலத்துக்காக வழிநடத்துகின்றனர். எனவே இவ்விடயம் தொடர்பில் பெற்றோர்கள் அவதானமாக செயற்படவேண்டும்.

பயங்கரவாதத்தினை ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதனால், என்னைக் கொல்வதற்கு புலிகள் முயற்சிக்கின்றனர். தெற்கில் அரசியல்வாதிகள் சிலர் சுயநல நோக்குடன் செயற்படுவதால் புலிகள் பயனடைகின்றனர்.

பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு தெற்கில் சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார்.

இச் சந்திப்புக்களையடுத்து ஜனாதிபதி பேராதனை கெட்டமே விகாரைக்குச் சென்று விகாராதிபதியைச் சந்தித்து உரையாடினார். (ஓ-6)

# வன்னியில் யுத்தத்தை நிறுத்துமாறு இந்திய அரசாங்கம் வலியுறுத்தவேண்டும்

## தமிழக அரசியல் பிரமுகர்களுடனான சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னியில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். இதனால், யுத்தத்தினை நிறுத்துமாறு இலங்கை அரசை இந்திய மத்திய அரசாங்கம் வலியுறுத்த வேண்டும்.இதற்கான அழுத்தத்தினை இந்திய மத்திய அரசுக்கு தமிழகக் கட்சிகள் வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது. தமிழகத்திற்கு விஜயம் செய்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் என் . ஸ்ரீகாந்தா இந்த கோரிக்கையினை விடுத்துள்ளார்.

சென்னையில் சனிக்கிழமை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் தா.பாண்டியன் மார்க்ஷிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில பிரமுகர்களான ராமகிருஷ்ணன், ஏ.கே. பத்மநாதன் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் அணித் தலைவர் தொல். திருமாவளவன் ஆகியோரைச் சந்தித்து பேசிய போதே ஸ்ரீகாந்தா எம்.பி. இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

வன்னியில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்துள்ள மக்கள் மனிதாபிமான உதவிகளின்றி அல்லல்படுகின்றனர். உணவு, உறைவிடம், மருந்து போன்ற அத்தியாவசிய தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலை அங்கு காணப்படுகின்றது. தொடரும் குண்டு வீச்சுக்கள், ஷெல் தாக்குதல்கள் என்பவற்றினால் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே இந்த விடயத்தில் இந்தியா தலையிட வேண்டும்.

யுத்தத்தினை நிறுத்துமாறு இலங்கை அரசை இந்திய மத்திய அர்சாங்கம் வலியுறுத்த வேண்டும். இதற்கான அழுத்தத்தினை மத்திய அரசுக்கு தமிழக கட்சிகள் கொடுக்க வேண்டும் என்றும் இந்த சந்திப்புக்களின் போது ஸ்ரீ காந்தா எம். பி. வலியுத்தியுள்ளார். இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம். பி.க்களான செல்வம் அடைக்கலநாதன், என். ஸ்ரீகாந்தா, எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் பாரதீய ஜனதா கட்சியின் தமிழ் மாநில செயலாளர் இல. கணேசன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் வைகோ, இந்திய காங்கிரஸின் தமிழ்மாநில செயலாளர் தங்கபாலு, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் ஆகியோரை சந்தித்து பேசவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போதும் வன்னியின் நிலைவரம் குறித்தும் இந்தியாவின் தலையீட்டின் அவசியம் தொடர்பாகவும் இவர்கள் எடுத்துக் கூறவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (ஓ-6)

# விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைய முன்வரவேண்டும்- இராணுவத்தினர் அழைப்பு

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைய முன்வரவேண்டும் என்றும் அவ்வாறு சரணடைபவர்களுக்கு உரிய புனர்வாழ்வளிக்கப்படும் என்றும் இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

வடபகுதியில் மோதல்களில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் எவ்வளவு விரைவில் சரணடைய முடியுமோ அவ்வளவு விரைவில் இராணுவத்தினரிடம் சரணடையுமாறு. அழைப்பு விடுக்கிறோம் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இவ் அழைப்பு பல்வேறு ஊடகங்கள் மூலம் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட இராணுவப் பேச்சாளர் இராணுவத்தினருக்கு எதிராகப் போராடுவதற்காகப் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தால் பலவந்தமாக இணைத்துக்கொள்ளப்பட்டவர்கள் எனக் கூறி யுள்ளார்.

அதேநேரம் விடுதலைப்புலி களின்கட்டுப்பாட் டுப்பகுதிகளிலுள்ள மக்களைஇராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்கு வருமாறு அழைப்பு விடுப்பதாகவும் இராணுவப் பேச் சாளர்தெரிவித்துள்ளார்.

அவ்வாறுவெளியேறும் மக்களை தங்கவைப்பதற்கான அடிப்படை வசதிகளைச்செய்து கொடுப்பதற்கு தாம் தயாராகவிருப்பதாகவும்,இது வரை நூற்றுக்கணக்கான பொதுமக்கள்இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்கு வந்திருப்பதாகவும்இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கும்இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்றுவரும்நிலையில் இரவு வேளைகளில் இராணு வத்தினரால் மாலை 5 மணிதல் மறுநாள் 6 மணி வரை கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற் கொள்ளப்படுவதாகவும் ஆளில்லாத வேவு விமானங்கள் இரவு வேளைகளில்பறப்பில்ஈடுபட்டு உளவு பார்ப்பதாகவும் கூறப்படுகிறது.



ஏற்கனவே இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களால் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது. அதே நேரம் முல்லைத் தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களை வவுனியாவிலிருந்து செயற்படுமாறு இராணுவத்தினர் பணிப்புரைவழங்கியிருப்பதாக தகவல்கள்வெளியாகியுள்ளன. (ஓ-6)

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும் (79)

ஓலைச் சுவடி

### பல் நறும்பினால் தீங்கு வருமா?

சிலருக்கு பல் நறும்பும் கெட்ட பழக்கவழக்கம் உண்டு. இது தீங்கு விளைவிக்கும் என்பது நம்பிக்கை. இது பற்கள் தேய்ந்து போகும் ஒருவித நோய்க்குக் காரணமாகும் என்று மருத்துவம் கூறுகின்றது. இதற்கு ஆயுர் வேதத்தில் ஒரு நிவாரணமும் உண்டு. கேழ்வரகைப் பாலில் சேர்த்து காய்ச்சிக் குடிக்க வேண்டும்.

# உடல் உறுதியும் ஆரோக்கிய வாழ்வும்

இன்றைய நவீன உலகு மக்களுக் கான வாழ்வியல் கோலங்களை மிக மிக இலகு வாக்கும் முயற்சியில் அதிகம் முனைகின் றது. பொருளாதார வளர்ச்சி, தொழில் நுட்பத் துறை வளர்ச்சி மற்றும் தொடர்பாடல் துறை வளர்ச்சி என்பன மக்களின் அன்றாட வாழ் வில் காணப்படும் தேவையற்ற தாமதங் களை நீக்கிவிடுகின்றது.இதனால் மனிதனின் உடலியல்சார் தொழிற்பாடுகள் குறைவடை கின்றன. இதன் விளைவு மனிதனிடத்தில் உடலியல், உளவியல் சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றன. காரணம் உடலியல் தொழிற் பாடுகள் இன் மையே ஆகும்.

இன்றைய காலகட்டத்தில் மனிதன் தனது அன்றாட தேவைகளை நிறைவுசெய்வதற்கு அதிகம் உடற்சக்தியை விரயம் செய்ய வேண் டிய அவசியம் குறைந்துகொண்டே வருகின் றது. மனிதனது அன்றாட வாழ்வில் அனைத்து செயற்பாடுகளையும் இலகுவாக்க புதிய புதிய கருவிகள்,தொழில்நுட்ப வளர்ச்சியால் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றது. காடுகளில் வேட்டை யாடித் திரிந்த மனிதன் விமாணங்களில் பறந்து தனது தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு தொழில்நுட்பம் முன்னேற்றம் கண்டுள்ளது.

மேலும் தொலைக்காட்சிப் பெட்டியின் அலைவரிசையைக் கூட இருந்த இடத்திலி ருந்தே ரிமோட் உதவியுடன் அலைவரி சையை மாற் றும் அளவிற்கு தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது. இத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சிகள் மனிதனது உடலியல் தொழிற் பாட்டை குறைத்து மனிதனை சோம்பேறி களாக்கி பலதரப்பட்ட உடல்சார் நோய்களுக் குள் வீழ்த்தி விடுகின்றது. இதற்கு முக்கிய காரணம் உடலியல் தொழிற்பாடுகள் இன்மை.

நீங்கள் நீண்டநேரம் மருத்துவமனையில் வைத்தியரின் மருத்துவ ஆலோசனைகளுக் காக காத்திருக்க விரும்புகிறீர்களா? அல்லது உங் களது ஆயுட்காலத்தை மருத்துவ மனைக்கு செல்லாமல் அதிகரிக்க விரும்பு கிறீர்களா? உடல்பயிற்சி மூலம் உடலை உறுதி யாக வைத்திருந்தால் ஆயுட்காலத்தை மாத்தி ரைகளின் உதவியின்றியும், பக்கவிளைவுகள் இல்லாமலும் அதிகரிக்கலாம். "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்பது மூத்தோர் வாக்கு. அதற்கேற்ப உடல் உறுதியாக காணப் படுமிடத்து,எவ்வாறான கடினவேலைகளையும் இலகுவாக செய்ய முடியும்.

### உடற்பயிற்சியின் அவசியம்

உடற்பயிற்சி ஆனது இருதயத்தினதும், நுரையீரலினதும் தொழிற்பாட்டை சிறப்பாக்கு கிறது, கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்துகிறது, தசை நார்களின் பலத்தை அதிகரிக்க உதவு கின்றது, இரத்த அழுத்தத்தைகட்டுக்குள் கொண்டுவரவும், நீரிழிவு நோய், இருதயம் சார்ந்த நோய்களை கட்டுப்படுத்தவும் உதவு கின்றது. மேலும் உடல் எடை, மன அழுத்தத் தை குறைக்கவும், நிம்மதியான தூக்கத்திற் கும், சிறந்த உடலமைப்பை பெறுவதற்கும் உடற்பயிற்சியானது உறுதுணையாக காணப் படுகின்றது.

உடல் உறுதியை பேண எவ்வாறான உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை நோக்கும்போது, உடல் உறுதி என்ற இலக்கினை அடைய இருதரப்பட்ட மார்க்கங்களை கையாளலாம். இவை தனியா ளின் இறுதி இலக்கினை வைத்து இரண்டு வகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. போட்டிக்கான நுட்பங்கள் சார்ந்த உடல் தயார்படுத்தலும் உடல் உறுதியும் (Skill Releated Physical Fitness)

2. ஆரோக்கியமான வாழ்வுக்கான உடல் தயார்படுத்தலும் உடல் உறுதியும் (Health Releated Physical Fitness)

இங்கு போட்டிக்கான நுட்பங்கள் சார்ந்த உடல் தயார்படுத்தலும் உடல் உறுதியும் எனும்போது உடற்பலம், தாங்குதிறன், வேகம், வளைதன்மை, வேறுபட்ட திசைகளில் வேக மாக திரும்பும் ஆற்றல், தசைநார் தொகுதிகள் ஒன்றுபட இயங்கும் ஆற்றல், குறிப்பிட்ட விளையாட்டுக்கான நுட்ப விருத்திக்கான பயிற்சிகள் என்பன இதனுள் அடங்கும்.

அடுத்து ஆரோக்கியமான வாழ்வுக்கான உடல் தயார்படுத்தலும் உடல் உறுதியும் எனும் போது ஆரோக்கியமான வாழ்வுக்காக உடல் உறுதியை மேம்படுத்தலும் இருதய தசை நார்களை வலுவுள்ளதாக்கி சிறந்த இருதய தொழிற்பாட்டை உறுதிசெய்து வாழ்நாள் காலத்தை அதிகரிக்க பின்வரும் உடல் உறுதிக் கூறுகளை விருத்தி செய்ய வேண்டும்.

**1. இருதய தாங்குதிறன் :-**

அதாவது இருதயமானது தசைநார்களுக் கான பிராணவாயுவையும், ஊட்டச்சத்துக்க ளையும் வழங்குவதோடு கழிவுப் பொருட் களை அகற்றுவதும் விரைவில் களைப்படை யாது இயங்கும் ஆற்றல்.

(உ+ம்) AerobicActivity

***2) தசைநார்களின் தாங்குதிறன்:-***

ஒரு தசைநாரோ அல்லது ஒருதொகுதி தசை நார்களோ தொடர்ச்சியாக நிலையான வெளிவாரியான விசைக்கெதிராக தொழிற் படும் ஆற்றல்

(உ+ம்) Push -ups (Some period of time)

***3) தசைநார் பலம்:-***

வெளிவாரியான விசைக்கெதிராக தசை நார்கள் இயங்கும் ஆற்றல் .இதனை விருத்தி செய்ய பழுதூக்கும் பயிற்சி செய்யலாம்.

***4) வளை தன்மை :-***

உடலில் மூட்டுக்களின் முற்றான வளை யும் தன்மை. இதனை விருத்திசெய்ய தசை நார்களை Stretch செய்வதன் ஊடாக அதி கரிக்கலாம்.

***5) உடலமைப்பு :-***

சரியான அளவில் கொழுப்புச் சத்தை உட லில் பேணி உடலமைப்பை சிறப்பாக பேணுதல்.

போன்ற உடல் உறுதிக் கூறுகளை வலு வாக்குவதன் மூலம் ஆரோக்கியமான வாழ் வுக்கான உடல் தயார்படுத்தலும் உடல் உறுதி யும் இலக்கினை அடைய முடியும்.

அடுத்து இத்தகைய இலக்கினை அடைய எவ்வாறான உடற்பயிற்சிகளை எந்த ஒழுங்கு முறையில் மேற்கொள்ள வேண்டும் என்ப தனை இங்கு நோக்குவோம்.

**சி.சபாஆனந்** M.P.Ed.,M.Phil
விரிவுரையாளர்,
விளையாட்டு விஞ்ஞான அலகு,
யாழ். பல்கலைக்கழகம்.

***1) உடலை மென்சூடேற்றுதல் (5-10min)***

இதற்காக வேகநடை, மெதுவான ஓட்டம், நின்ற இடத்தில் முழங்காலை உயர்த்துதல் , கைகளைச் சுற்றுதல் போன்ற உடலியல் அப்பியாசங்களை செய்யலாம். இதனை ஏனைய உடற்பயிற்சியை ஆரம்பிக்க முன் கட்டாயமாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

***2) தசைநார்களுக்கு பலமூட்டுதல்***

இத்தகைய பயிற்சிகளை வாரத்திற்கு இரண்டு தடவைகள் 20 நிமிடம் கொண்ட பயிற்சியாக மேற்கொள்ளலாம். இத்தகைய இயல்பினை விருத்திசெய்ய பழுதூக்கும் பயிற்சிகள் சிறந்தவையாகக் காணப்படுகின்றன.

***3) தசைநார்களின் நீண்டநேரம் இயங் கும் ஆற்றல்***



இத்தகைய பயிற்சிகளை வாரத்தில் ஒரு தடவை 30 நிமி டம் கொண்ட பயிற்சியாகமேற் கொள்ளலாம். இந்த இயல்பி னை விருத்தி செய்ய Push - ups ,Fit-ups, Plyometric Exercise போன்ற உடலியல் அப்பியா சங்க ளைமேற்கொள் ளலாம்.

***4) களைப் பின்றி நீண்ட நேரம் இருதயத்தினால் பிராணவாயுவை தசை நார்களுக்கு வழங்கும் ஆற்றல்***

இப் பயிற்சிகளை வாரத்தில் மூன்று நாட்கள் குறைந்தது 20 நிமிடம் கொண்ட பயிற்சியாக மேற்கொள்ளலாம். பயிற்சிகள் தொடர்ச்சியாக 20 நிமிடங்கள் இடைவிடாது மேற்கொள்ளப்படும் பயிற்சியாக அமைதல் வேண்டும். இத்தகைய இயல்பினை விருத்தி செய்ய வேகநடை, மெதுவான ஓட்டம்,நீச்சல், சைக்கிளோட்டம், படகுச்சவாரி போன்ற உடலியல் அப்பியாசங்களை செய்யலாம்.

***5) வளைதன்மை***


இப் பயிற்சிகளை ஒவ்வொரு நாளும் 10-15 நிமிடம் மேற்கொள்ளலாம். இவை மெதுவான துள்ளல் அற்ற (without bounce) Stretching ஆக இது அமைந்திருத்தல் வேண்டும்.

***6) உடற்சூட்டை தளர்த்தும் பயிற்சி***

குறைந்தது 5-10 நிமிடங்கள் பயிற்சியின் முடிவில் கட்டாயமாக இவ் அப்பியாசங்களை செய்தல்வேண்டும்.இதற்காக மெதுவான ஓட்டம், நடை, Slow Long Duration Stretch ஆக இத்தகைய உடலியல் அப்பியாசங்கள் காணப்படவேண்டும்.

மேற்கண்டவாறான ஒழுங்குமுறையில் ஒவ்வொருவரும் உடற்பயிற்சியை மேற் கொண்டால் சிறப்பான உடல் உறுதியை பேணி ஆரோக்கியமான வாழ்வைப் பெறலாம். உடற்பயிற்சி சார்ந்த அறிவு சமூகத்தில் அனை த்துத் தரப்பினரையும் சென்றடை வதனூ டாகவே நோயற்ற ஆரோக்கியமான சமூகத் தை கட்டியெழுப்பலாம்.

# தக்காளி மகத்துவம்



தக்காளி ஒரு தலைசிறந்த மருந்து என்பது தெரிய வந்துள்ளது. தக்காளி சாப் பிட்டால் நுரையீரல் சம்பந்தமான நோய் கள் பத்தடி தள்ளித் தான்நிற்கும் தக்காளி யில் எதிர் ஒக்சிஜனேற்றியான, லைக்கோ பென் (lycopene) என்னும் வேதிப்பொ ருள் உள்ளது.


இது நுரையீரலின் செயல்பாட்டை பாதிக் கக்கூடிய அணுக்களை செயல்படாமல் தடுக் கிறது. இதனால் நுரையீரல் ஆரோக்கிய மாக இருக்கிறது.

புகைபிடிப்பதனால் ஏற்படக்கூடிய நுரை யீரல் பிரச்சினைகளையும் தக்காளி குறைக் கும் என்றும் கண்டறிந்துள்ளனர்.

எனவே நுரையீரல் ஆரோக்கியத்தை விரும்புவோர் தவறாது தக்காளி சாப்பிட வேண்டும்.

# பற்களை பாதுகாக்கும் திராட்சை





தினம் இரண்டு திராட்சைகளை சாப்பிட்டால் போதும், பல்வலிக்கு 'பை' 'பை' சொல்லலாம். திராட்சையில் விற்றமின் 'சி' சத்து ஏராளமாக உள்ளது.

பற்களையும், ஈறுகளையும் பலமானதாக வைத்துக் கொள்ள விற்றமின் 'சி' சத்து அவசியமாகும்.

இதனால் திராட்சை மூலம் பற்களுக்கு பலமும், ஈறுகளுக்கு பொலிவும் கிடைக்கும். ஈறுகளில் இரத்தம் கசிதல்,பற்கள் ஆடுதல் போன்ற பிரச்சினை களும் திராட்சை சாப்பிட்டால் குணம் ஏற்படும். பற்களின் பலம் காக்க திராட்சை திகட்டாத மருந்துதான்.




# இரத்த அழுத்தத்தை குறைக்கும் காய்கறிகள்

அவசரம் நிறைந்த இந்த உலகில் , பலர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட் டுள்ளனர். இந்த நோய் திடீர் மாரடைப்பை ஏற்படுத்தும் அளவிற்கு ஆபத்தான ஒன்று.

இந்தளவுக்கு ஆபத்தான நோய், காய்கறிகள் சாப்பிடுவதன் மூலம் கட்டுக் குள் இருக்கும் என்று விஞ்ஞானிகள் தெரி வித்துள்ளனர்.

இரத்த அழுத்தம் அதிகரிக்க உப்பு சத்தும் ஒருகாரணம். காய் கறிகளில் உப்புச்சத்து குறைந்த அளவே உள்ளது. அதேசமயம் காய்கறிகளில் விற்றமின் கள், நார்ச்சத்துக்கள் அதிக அளவில் இருக்கும். இதனால் நீரிழிவு நோயையும் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளமுடியும். காய்கறிகளில் கலோரிகள் குறைவாக இருப்பதாலும், இரத்த அழுத்தம் கட்டுப்பாட் டில் இருக்கும்.



காய்கறிகளில் இருக்கும் புரதங்கள், மாமிசங்கள் மூலம் கிடைக்கும் புரதங் களை விட சிறப்பானது. இந்த இயற்கை புரதங்கள்,ஹார்ட் அட்டாக் மற்றும் இதய நோய்கள் ஏற்படும் வாய்ப்பை குறைக்கும். இவற்றையெல்லாம் பார்க்கும் போது காய்கறிகள், பூலோகத்தில் கிடைக்கும் அமிர்தம் என்பது உண்மைதான் எனத் தோன்றுகிறது.

# அதிக பழங்கள் ஆபத்து

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்த மும் நஞ்சு" என்பது பழமொழி.


அமிர்தத்தை தேவைக்கு அதிகமாக சாப்பிட்டால் ஆபத்து என்பதுபோல, பழங்களையும் அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது ஆபத்தானது என கண்டறிந்து உள்ளனர்.

பழங்களில் "பிரக்டோஸ்" என்னும் வேதிப்பொருள் உள்ளது.

பழங்களின் இனிப்பு சுவைக்கு இது தான் காரணம். மனிதனுக்கு ஒரு நாளைக்கு 25 கிராம் பிரக்டோஸ் மட்டுமே ஜீரணமாகும்.


அதற்கு மேல் சாப்பிட்டால், வயிற்று வலி, வயிற்றுப்போக்கு, வாயுப் பிரச்சினை கள் போன்றவை ஏற்படும்.

அளவுக்கு அதிகமாக அப்பிள் ஜூஸ் குடிக்கும் குழந்தைகள் இதுபோன்று பிரச்சி னைகளால் எளிதில் பாதிக்கப்படும் வாய்ப்பு இருப்பதாக தெரிய வந்துள்ளது. வெறும் வயிற்றில் பழங்கள் சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும். பழங்கள் அதிகம் சாப் பிடும் போது, காய்கறி களையும் சாப்பிட் டால் வயிற்றுப் பிரச்சினைகள் வராது தவிர்க்க முடியும்.



எனவே பழங்கள் அதிகம் சாப்பிடுபவர் கள் குறைத்துக் கொள்ள வேண்டும்.

# கோலூன்றிப் பாய்தலில் ரஷ்யாவின் இசின்பயேவா புதிய உலக சாதனை



ரஷ்யாவின் வெற்றி மங்கை எலினா இசின்பயோவாவின் சாதனை வேட்டை தொடர்கிறது. நேற்று பீஜிங் ஒலிம்பிக்கில் நடந்த பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 5.05 மீற்றர் உயரத்தைத் தாண்டி புதிய உலக சாதனை படைத்தார்.

நேற்று நடந்த பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் ரஷ்யாவின் எலினா இசின்பயேவா, அமெரிக்காவின் ஜெனிபர் ஸ்டக்னைஸ்கி என முன்னணி வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இதில் சிறப்பாகப் பாய்ந்த இசின்பயேவா 5.05 மீற்றர் உயரம் தாண்டிப் புதிய உலக சாதனை படைத்தார். முன்னதாக இவர் கடந்த மாதம் மொனாகோ நாட்டில் நடந்த உலக சம்பியன்சிப் போட்டியில் 5.04 மீற்றர் தாண்டியதே சாதனையாக இருந்தது.

இவருக்கும் வெள்ளிப் பதக்கம் வென்ற அமெரிக்காவின் ஜெனிபருக்குமிடையே 0.25 மீற்றர் வித்தியாசம் இருந்தது. வெண்கலப் பதக்கத்தை மற்றொரு ரஷ்ய வீராங்கனை ஸ்வெட்லானா பியேபாநோவா வென்றார்.

## கென்ய வீராங்கனை தங்கம் வென்றார்



பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் கென்யாவின் பமீலா ஜெலிமோ ஒரு நிமிடம் 54.87 விநாடிகளில் வந்து தங்கம் வென்றார்.

வெள்ளியை மற்றொரு கென்ய வீராங்கனை ஜெனத் பிசயன்னை கைப்பற்றினார். மொராகோவின் ஹஸ்னா பென்ஹசி வெண்கலம் வென்றார்.




## ஒலிம்பிக் வரலாற்றில் பனாமாவுக்கு தடகளப் போட்டியில் முதல் தங்கம்



பீஜிங் ஒலிம்பிக்கில் நீளம் பாய்தல் ஆண்கள் பிரிவில் பனாமா வீரர் இரிவிங் ஷலாடினோ தங்கம் வென்று ஒலிம்பிக் வரலாற்றில் தடகளப் போட்டியில் பனாமாவுக்குத் தங்கம் பெற்றுக் கொடுத்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

2007 ஆம் ஆண்டு உலக சம்பியன்சிப் போட்டியில் சம்பியனான ஷலாடினோ 8.34 மீற்றர் நீளம் பாய்ந்து தங்கப் பதக்கத்தை வென்றதுடன் தென்னாபிரிக்காவின் ஹோட்ஸோ மொகோனா 8.24 மீற்றர் நீளம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் வெண்கலப் பதக்கத்தை 8.20 மீற்றர் நீளம் பாய்ந்த கியூபா வீரர் ஓப்ராஹிம் ஹமியோவும் பெற்றனர்.

ஒலிம்பிக் வரலாற்றில் தட களத்தில் முதலாவது தங்கப் பதக்கத்தைப் பெறுவதுடன் ஒலிம்பிக்கில் தடகளப் போட்டிகளில் பெறும் 3-வது பதக்கம் இதுவாகும்.

1948 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் 200 மீற்றர், 100 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கங்கள் கிடைத்ததற்கு 60 வருடங்களுக்குப் பின்னர் தற்போதே தடகளப் போட்டிகளில் 3-வது பதக்கத்தைப் பெற்றுக் கொள்கின்றது.

இதேவேளை பனாமா பெறும் தட களத்தில் முதலாவது தங்கமும் இதுவாகும்.

## பாலா

### குத்துச் சண்டையில் அகில் குமார் தோல்வி

ஒலிம்பிக் குத்துச் சண்டையில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட காலிறுதிப் போட்டியில் இந்திய வீரர் அகில் குமார் தோல்வியடைந்தார்.

நேற்று நடைபெற்ற குத்துச் சண்டையின் 54 கிலோப் பிரிவின் காலிறுதிப் போட்டியில் இந்திய வீரர் அகில் குமார், மால்டோவா குடியரசு வீரர் வேசிசிலாவ் கோஜனை எதிர் கொண்டார்.

இதில் கோஜன் நடத்திய அதிரடித் தாக்குதலில் 10-3 புள்ளிக் கணக்கில் அகில் குமார் தோல்வியைத் தழுவினார்.

இதன் மூலம் குத்துச் சண்டைப் போட்டியில் இந்தியாவின் பதக்கக் கனவு தகர்ந்துள்ளது.

## ★ முதலாவது ஒரு நாள் போட்டி ★

# மெண்டிஸ், முரளிதரன் சுழல் மாஜாயாலம்; இந்திய அணி 8 விக்கெட்டுக்களால் தோல்வி

(தம்புள்ள)

மெண்டிஸ், முரளியின் துல்லியமான சுழலில் முதலாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் சொதப்பிய இந்திய அணி 146 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி மூன்று டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி நேற்றுத் தம்புள்ளவில் பகல் ஆட்டமாக நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் 46 ஓவர்களில் 146 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் யுவராஜ் சிங் 23 ஓட்டங்களையும் சர்மா 19 ஓட்டங்களையும் ரெய்னா 17, ஓஜா ஆட்டமிழக்காமல் 16 மற்றும் பட்டேல் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.


அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் காம்பீர் ஓட்டம் எதுவும் எடுக்காமல் போட்டியின் இரண்டாவது பந்திலேயே ஆட்டமிழந்தார்.

பந்து வீச்சில் அஜந்த மெண்டிஸ், முத்தையா முரளிதரன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் குலசேகர 2 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 147 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணித் தலைவர் ஜெயவர்த்தன, கபுகெந்தரவின் சிறப்பான 102 ஓட்டங்கள் இணைப்பாட்டத்தின் மூலம் 34.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 147 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி வெற்றது.

இதில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 61 ஓட்டங்களையும் கபுகெந்தர 45 ஓட்டங்களையும் ஆட்ட மிழக்காமல் எடுத்தனர்.


பந்து வீச்சில் முனாப் பட்டேல் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம்இலங்கை அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு



நாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

ஆட்ட நாயகனாக யுவராஜ் சிங், தோனியின் விக்கெட்டுக்களை வீழ்த்தி இலங்கை அணியின் வெற்றிக்குத் திருப்பு முனை அமைத்த அஜந்த மெண்டிஸ் தெரிவானார்.(5)

## சுசந்திகா ஜயசிங்க இன்று களத்தில்



ஒலிம்பிக்கில் இலங்கையின் கடைசி எதிர்பார்ப்புக்களான குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க மற்றும் ஈட்டி எறிதல் வீராங்கனை நதீகா லக்மாலி ஆகியோர் இன்று களமிறங்கவுள்ளனர்.

இலங்கையின் பதக்க எதிர்பார்ப்பான சுசந்திகா ஜயசிங்க இன்று காலை 200 மீற்றர் தெரிவுப் போட்டியில் பங்குபெறவுள்ளார்.

இதன்போது அவர் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனை அலிஸ்சன் பிலிக்சுடன் முதற்சுற்றில் ஓடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியின் இரண்டாவது சுற்றுத் தெரிவுப் போட்டி இன்று மாலை நடைபெறவுள்ளது. அத்துடன் இதன் அரையிறுதிப் போட்டிகள் நாளை நடைபெறவுள்ளதோடு இறுதிப் போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறும்.

அதேபோன்று இலங்கை நேரப்படி இன்று காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள பெண்களுக்கான ஈட்டி எறிதல் முதல் சுற்றுப் போட்டியில் நதீகா லக்மாலி பங்கேற்கிறார். இதன் இறுதிப் போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

## பதக்கப் பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 39 | 14 | 14 | 67 |
| அமெரிக்கா | 22 | 24 | 26 | 72 |
| பிரித்தானியா | 12 | 7 | 8 | 27 |
| அவுஸ்திரேலியா | 11 | 10 | 12 | 33 |
| ஜேர்மனி | 9 | 7 | 7 | 23 |
| ரஷ்யா | 8 | 13 | 15 | 36 |
| கொரியா | 8 | 9 | 6 | 23 |
| ஜப்பான் | 8 | 5 | 7 | 20 |
| இத்தாலி | 6 | 6 | 6 | 18 |
| உக்ரைன் | 5 | 3 | 8 | 16 |
| பிரான்ஸ் | 4 | 11 | 13 | 28 |
| ரோமானியா | 4 | 1 | 3 | 8 |
| நெதர்லாந்து | 3 | 5 | 4 | 12 |
| ஸ்பெயின் | 3 | 3 | 2 | 8 |
| போலந்து | 3 | 3 | 1 | 7 |
| சுலோவாக்கியா | 3 | 1 | - | 4 |
| கனடா | 2 | 3 | 4 | 9 |
| கென்யா | 2 | 3 | 2 | 7 |
| செக்குடியரசு | 2 | 3 | - | 5 |
| ஜமேக்கா | 2 | 2 | - | 4 |
| டென்மார்க் | 2 | 1 | 3 | 6 |
| நியூசிலாந்து | 2 | 1 | 3 | 6 |
| வடகொரியா | 2 | 1 | 3 | 6 |
| எதியோப்பி | 2 | 1 | - | 3 |
| சுவிட்சர்லாந்து | 2 | - | 3 | 5 |
| ஜோர்ஜியா | 2 | - | 1 | 3 |
| கியூபா | 1 | 5 | 5 | 11 |
| பெலாரஸ் | 1 | 3 | 7 | 11 |
| கஜகஸ்தான் | 1 | 3 | 4 | 8 |
| சிம்பாவே | 1 | 3 | - | 4 |
| அஜர்பைஜான் | 1 | 2 | 2 | 5 |
| நோர்வே | 1 | 2 | 2 | 5 |
| இந்தோனேசியா | 1 | 1 | 3 | 5 |
| சுலோவேனியா | 1 | 1 | 2 | 4 |
| பல்கேரியா | 1 | 1 | 1 | 3 |
| பின்லாந்து | 1 | 1 | 1 | 3 |
| மொங்கோலியா | 1 | 1 | - | 2 |
| பிரேஸில் | 1 | - | 5 | 6 |
| கமரூன் | 1 | - | - | 1 |
| இந்தியா | 1 | - | - | 1 |
| பனாமா | 1 | - | - | 1 |
| தாய்லாந்து | 1 | - | - | 1 |
| தனிசியா | 1 | - | - | 1 |
| ஹங்கேரி | - | 4 | 1 | 5 |
| சுவீடன் | - | 3 | - | 3 |
| துருக்கி | - | 2 | 1 | 3 |
| ஆஸ்திரியா | - | 1 | 2 | 3 |
| கிரீஸ் | - | 1 | 2 | 3 |
| உஸ்பெகிஸ்தான் | - | 1 | 2 | 3 |
| அல்ஜீரியா | - | 1 | 1 | 2 |
| கொலம்பியா | - | 1 | 1 | 2 |
| குரோசியா | - | 1 | 1 | 2 |
| கர்கிஸ்தான் | - | 1 | 1 | 2 |
| செர்பியா | - | 1 | 1 | 2 |
| சிலி | - | 1 | - | 1 |
| ஈகுவடார் | - | 1 | - | 1 |
| எஸ்தோனியா | - | 1 | - | 1 |
| மலேசியா | - | 1 | - | 1 |
| போர்த்துக்கல் | - | 1 | - | 1 |
| தென்னாபிரிக்கா | - | 1 | - | 1 |
| சிங்கப்பூர் | - | 1 | - | 1 |
| ரினிடாட் | - | 1 | - | 1 |
| வியட்நாம் | - | 1 | - | 1 |
| ஆர்மேனியா | - | - | 5 | 5 |
| சீனா தைபே | - | - | 2 | 2 |
| ஆர்ஜென்டினா | - | - | 1 | 1 |
| எகிப்து | - | - | 1 | 1 |
| லிதுனியா | - | - | 1 | 1 |
| மொறோக்கோ | - | - | 1 | 1 |
| மெக்ஸிக்கோ | - | - | 1 | 1 |
| தஜிகிஸ்தான் | - | - | 1 | 1 |
| ரூகோ | - | - | 1 | 1 |

# இரண்டு மாதங்களுக்குத் தேவையான உணவு வன்னியில் கையிருப்பிலுள்ளது

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னிப் பிராந்தியத்திலுள்ள மக்கள் அடிப்படை வசதிகள், இன்றி அல்லல் படுவதாக சில ஊடகங்கள் சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் செய்திகளை வெளியிட்டுள்ளன. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. வன்னியில் இன்னும் இரண்டு மாதங்களுக்குத் தேவையான உணவுகள் கையிருப்பில் உள்ளதாக மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

மோதல் காரணமாக இடம்பெயரும் வன்னி மக்களுக்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் மனித நேய நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அமைச்சர் மேலும் கூறியதாவது,

வன்னிப் பிராந்திய மக்கள் எதிர்நோக்கியிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அவர்களுக்கு மனித நேய உதவிகளை வழங்குவதற்கான ஆலோசனைக் குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் செயலாளர்கள் வன்னிப் பிரதேச மக்கள் அடிப்படை வசதிகளின்றி அல்லல் படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்தனர்.

சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் சில ஊடகங்கள் கொண்டு செல்லும் பிரசாரம் பொய்யானதெனவும் அவர்கள் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் முன்னிலையில் தெரிவித்தனர்.

வன்னிப் பிரதேசத்திலுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை கருத்தில் கொண்டு சில புதிய திட்டங்களை அரசு நடைமுறைப் படுத்தவுள்ளது.

இதன்படி வவுனியாவை கேந்திர ஸ்தானமாக அமைத்து அப்பிரதேசத்திற்கு தேவையான அனைத்து உணவுகளையும் இப்பிரதேசத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு தேவையான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் சமைத்த உணவுகளை மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அதிபர்கள் கேட்கும் நிதியை வழங்குவதற்கு குறித்த பிரிவுக்குப் பொறுப்பான அமைச்சுக்கள் தயாராகவுள்ளன.

இதுவரை 18 மில்லியன் ரூபாய் கிளிநொச்சியில் இடம்பெயர்ந்தவர்களுக்காக வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## சீமெந்து விநியோகம்

வீடு மற்றும் மலசலகூடம் கட்டுபவர்களுக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக சீமெந்து விநியோகம் செய்யப்படுவதாக அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதற்கென 44 ஆயிரம் சீமெந்து பைக் கற்றுக்கள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி இரு தேவைகளுக்காகவும் சீமெந்துப் பைக்கற்றுக்களைப் பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோரின் உறுதிப்படுத்திய கடிதங்களை பெற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் சீமெந்து பைக்கற்றுக்களை பெற்றுக்கொள்ளலாம் என அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## கொழும்பில் இருவர் கடத்தப்பட்டதாக முறையீடு

வத்தளை மற்றும் கொழும்பு புதுச்செட்டித் தெரு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவர் ஆயுதக் குழுவொன்றால் கடத்திச் செல்லப் பட்டுள்ளனர்.

இவர்கள் இருவர் தொடர்பிலும் இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லையென அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கடத்தல் மற்றும் காணாமல் போதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி குழுவினரிடம் நேற்று முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

வத்தளை குனுப்பிட்டி ஸ்ரீஜெயந்த மாவத்தையைச் சேர்ந்த கிறிஸ்தோபரம் பிரான்ஸ் சேர்ச்சில் (வயது 40) எனும் அங்கவீனர் கடந்த 15 ஆம் திகதி இரவு இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9.30 அளவில் இனந் தெரியாத சிலர் அவரைத் தாக்கி இழுத்துச் சென்றதாகவும் இது தொடர்பாக கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பு புதுச்செட்டித் தெருவைச் சேர்ந்த செல்வராஜா பாலகுமார் (வயது 33) என்பவரும்.

கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாத சிலரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் சீருடையில் வந்ததாகக் கூறப்படும் சிலரே அவரைக் கடத்திச் சென்றதாக அவரது மனைவி தெரிவித்துள்ளார். (ச-3)

# தமிழர்களுக்கு ஆதரவாக ஒபாமா குரல் கொடுப்பார்

## ரி.ஆர்.ஓ. செயற்பாட்டாளர் நம்பிக்கை

இலங்கையில் தமிழர்களுக்கு ஆதரவாக ஒபாமா குரல் கொடுப்பார் என அமெரிக்கத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முக்கிய செயற்பாட்டாளர் ரஞ்சன் இராமநாதன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் பல்வேறு துன்பங்களை எதிர்நோக்கி வரும் எமது சொந்தங்களுக்கு ஒபாமா ஆதரவு வழங்குவார் எனப் பெரிதும் எதிர்பார்ப்பதாகவும்; தமிழர் இன ஒடுக்கு முறைக்கு எதிராக ஒபாமா குரல் கொடுப்பார் எனத் திடமாக நம்புவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் பராக் ஒபாமா தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களிடம் 'ஒபாமாநிதி' பெற்றுக் கொண்டதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் தெரிவிற்காகப் போட்டியிட்ட ஹிலாரி கிளின்ரனுக்கு ஏற்கனவே விடுதலைப் புலி ஆதரவாளர்கள் பணம் வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டது.

2 ஆயிரத்து 300 அமெரிக்க டொலர்களை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களில் முக்கிய நபரான ஹிலாரி கிளின்ரனுக்கு ரஞ்சன் இராமநாதன் வழங்கியதாகப் பிரபல ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதான செயற்பாட்டாளர் எனத் தெரிய வந்ததை அடுத்து பெறப்பட்ட நிதி திருப்பி கொடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தை கடுமையாக விமர்சிப்போருக்கு இராமநாதன் நிதியுதவி அளித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குப் பொஸ்னிய முறையிலான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என அமெரிக்கத் தமிழர் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சார்பான அமைப்புக்கள் பல்வேறு பெயர்களில் அமெரிக்காவில் இயங்கி வருவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. (எ-5)

## ஐ.தே.க உறுப்பினர் அரசுடன் இணைவு

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான நந்தகெதர எக்கநாயக்க நேற்று ஆளுங் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டுள்ளார்.

இவர் முன்னர் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கேகாலை ரூவன்வெலவில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின் போதே இவர் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டார்.

அங்கு அவர் உரையாற்றும் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வினால் முன்னெடுத்துச் செல்லும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கைகொடுக்கும் நோக்கிலேயே தாம் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் இணைந்து கொள்வதாக அவர் தெரிவித்தார். (ச-3)

## நாச்சிக்குடா...

எதிர்த்தாக்குதலை நடத்தி படையினரின் நகர்வினை முறியடித்தனர்.

இதில் 10க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். 20க்கும் அதிகமான படையினர் படுகாயமடைந்தனர்.

கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் மற்றும் படைப் பொருட்கள் சூனியப் பிரதேசத்தில் சிதறிக் காணப்படுகின்றன என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## 1000 ரூபா...

இலங்கை-இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டி தொடர் ஆரம்பமாவதற்கு முன்னதாக இந் நாணயம் வெளியிடப்பட்டுள்ளது. (ச)

## அமைச்சர் மேர்...

சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்த போதிலும் சந்தேக் நபர்கள் தலை மறைவாகியிருப்பதால் அவர்களை கைது செய்ய முடியவில்லை என நீதிவானிடம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்தே அமைச்சர் மேர்வின் சில்வா உட்பட சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ச-3)

## வன்னிப்...

அப்பால் புளியங்குளம், கனகராயன்குளம், மாங்குளம் போன்ற பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறியிருப்ப தனாலும், ஏ9 வீதி கண்ணிவெடி ஆபத்து மிக்கதாக மாறியிருப்பதனாலும், இந்த வீதி வழியாக வாகனங்களில் பயணம் செய்வதற்கு அரச அதிகாரிகள், ஊழியர்கள் இப்போது அச்சமடைந்திருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஏ)

## வன்னியில்...

தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மின்சார, சுகாதார, குடிநீர் வசதிகளை செய்து கொடுப்பதற்காகவே இந்தநிதி பயன்படுத்தப்பட்டுள்ளது

இவ்விரு மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க அதிபர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே அவசர நிதி வழங்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பாண்டியன் குளம் துணுக்காய் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே கிளிநொச்சி மாவட்டத்தை நோக்கி இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 8 மில்லியன் ரூபாயும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 18 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். (ஏ)

## மாகாண சபை தேர்தலுக்கு...

இரத்தினபுரியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாகாண சபை தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'எங்களுடைய இளைஞர்கள்' எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்பாக கிளிநொச்சியை கைப் பற்றி விடுவார்கள்.

நாங்கள் கிளிநொச்சியை நெருங்கிவிட்டோம். எங்களுக்கு அதனைக் கைப்பற்றுவற்கு நீண்ட நாட்கள்தேவையில்லை. எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள சப்ரகமுவ, வடமத்திய மாகாண சபை தேர்தல்களுக்கு முன்பாக இராணுவத்தினர் கிளிநொச்சியை கைப்பற்றி விடுவார்கள் என்றார் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க.

இதேவேளை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வட மத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜானக பெரேரா தாம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை எதிர்ப்பதாகவும் அவர்களுடன் அரசியல் தீர்வொன்றை பேசித் தீர்ப்பதையே தாம் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தெற்கில் சிலர் குழப்பங்களை ஏற்படுத்தி பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை தடுக்க முயற்சி மேற்கொண்ட போதிலும் யுத்தம் தொடரும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய ஓர் சூழ்நிலையை உருவாக்குவதற்கான மனிதாபிமானப் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)




## பாக். ஜனாதிபதி பர்வேஷ்...

பாகிஸ்தான் தனது சுதந்திரத்துக்கு பின்னர் சந்தித்த மிகவும் முக்கியமான நெருக்கடி நிலைகள் சிலவற்றின்போது கடந்த 9 ஆண்டுகளில் தான் நாட்டை சிறப்பாக வழி நடத்திச் சென்றதாக கூறியுள்ளார்.

தனது சட்ட ஆலோசகர்கள் மற்றும் அரசியல் ஆதரவாளர்களின் ஆலோசனையுடன் நாட்டின் நன்மையை மனதில் கொண்டே தான் தனது பதவியை இராஜினாமாச் செய்வதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

தற்போதுள்ள கூட்டணி அரசாங்கம் தன்னை ஒரு பிரச்சினையாக கருதுவதாகவும் தன்னை குற்றஞ்சாட்டி பதவியிறக்க விரும்புவதாகவும் முஷாரப் கூறினார்.

ஒரு குற்றப்பத்திரிகையை முன்வைக்க நாடாளுமன்றத்திற்கு உரிமை உண்டு என்கிறபோதிலும் தனக்கு எதிராக சாட்டப்படுகின்ற குற்றச்சாட்டுக்களில் ஒன்றைக் கூட எவராலும் உறுதிப்படுத்த முடியாதென்றும் அவர் வலியுறுத்தினார்.

முஷாரப் பதவியை துறக்க முடிவு செய்திருப்பது குறித்து பாகிஸ்தானில் மக்கள் பலர் நிம்மதியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### முஷாரப்பின் ஆட்சிக்காலம்

பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்துக்கு எதிராக 1999 ஒக்டோபரில் தனது ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட ஒரு இராணுவப் புரட்சியின் மூலம் பதவிக்கு வந்தவர் முஷாரப்.

பாகிஸ்தான் முன்பு ஆதரவும், உதவியும் வழங்கி வந்த ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய தலிபான் அமைப்புக்கு எதிராகவும், அமெரிக்காவுக்கு ஆதரவாகவும் செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு பின்னர் செயற்படுவது என்று முடிபு செய்ததுதான் அதிபர் முஷாரப் ஆட்சியின் மிகவும் முக்கிய தருணம் என்று சொல்லலாம்.

எதிர்க்கட்சிகளில் நிபந்தனையை ஏற்று தனது இராணுவத் தலைவர் பதவியைத் துறந்து ஒரு அதிபராக மாறியதுதான் முஷாரப்பின் முக்கிய அதிகாரத் தளத்தில் ஏற்பட்ட முதலாவது வீழ்ச்சியாகும்.

அவரது ஆதரவாளர்கள் கடந்த பெப்ரவரி தேர்தலில் தோல்வியடைந்து அவரது முன்னாள் அரசியல் எதிரிகளான நவாஸ் ஷெரீப் போன்றவர்கள் மீண்டும் பதவிக்கு திரும்பிவர வழி செய்தமையே தற்போது அவர் பதவி துறக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.